Registered with the Registrar
of Newspapers for India
under No. 10410

Registered No. PY/44/2018-20
WPP No. TN/PMG(CCR)/WPP-88/2018-20
Dated : 18-2-2020
Price : ₹ 29-00

सत्यमेव जयते

# புதுச்சேரி மாநில அரசிதழ்
# La Gazette de L' État de Poudouchéry
# The Gazette of Puducherry

**PART - I**

| சிறப்பு வெளியீடு | EXTRAORDINAIRE | EXTRAORDINARY |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற வெளியீடு | Publiée par Autorité | Published by Authority |
| விலை : ₹ 29-00 | Prix : ₹ 29-00 | Price : ₹ 29-00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| எண் | 30 | புதுச்சேரி | செவ்வாய்க்கிழமை | 2020 ஆம் | பிப்ரவரி மீ | 18 ௳ |
| No. | | Poudouchéry | Mardi | 18 | Février | 2020 (29 Magha 1941) |
| No. | | Puducherry | Tuesday | 18th | February | 2020 |


GOVERNMENT OF PUDUCHERRY
**LAW DEPARTMENT**

*No. 22/US/PA/2020-LD.*

*Puducherry, dated 29th January 2020.*

The translation in Tamil of the Central Acts, *viz.,*–

(1) The Puducherry (Administration) Act, 1962,

(2) The Puducherry (Extension of Laws) Act, 1968 and

(3) The Pondicherry (Alteration of Name) Act, 2006,

are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

(1) புதுச்சேரி (நிருவாகம்) சட்டம், 1962,

(2) புதுச்சேரி (சட்டங்கள் நீட்டிப்பு) சட்டம், 1968,

(3) பாண்டிச்சேரி (பெயர் மாற்றுகை) சட்டம், 2006

ஆகிய மையச் சட்டங்களின் தமிழாக்கங்கள் குடியரசுத் தலைவரின் அதிகாரவுரிமையின் கீழ் ஈங்கிதனால் வெளியிடப்படுகின்றன. இவையே, அதிகார உறுதிபெற்ற வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)-இன் பிரிவு 2-இன் பிரிவுக்கூறு (அ)-வின்படி தமிழில் அதிகார உறுதிபெற்ற வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

N. Murugavel,
Under Secretary to Government (Law).

**புதுச்சேரி (நிருவாகம்) சட்டம், 1962**

**[The Puducherry (Administrtion) Act, 1962]**

**(சட்ட எண் 49/1962)** (1962, டிசம்பர் 5)

புதுச்சேரி நிருவாகத்திற்கும் அது தொடர்புடைய பொருட்பாடுகளுக்கும் வகையம் செய்வதற்கான ஒரு சட்டம்.—

இது இந்தியக் குடியரசின் பதின்மூன்றாம் ஆண்டில் நாடாளுமன்றத்தினால் சட்டமியற்றப்படுவதாகுக:-

1. **குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.**- (1) இச்சட்டம் 1962ஆம் ஆண்டு புதுச்சேரி (நிருவாகம்) சட்டம் என அழைக்கப்பெறும்.

(2) இது புதுச்சேரி முழுவதும் அளாவிநிற்கும்.

(3) இது 1962 ஆகஸ்ட் 16ஆம் நாளன்று செயலாற்றலுக்கு வந்துள்ளதாகக் கொள்ளப்பட வேண்டும்.

2. **பொருள்வரையறைகள்.**- இச்சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி:-

(அ) "ஆட்சியாளர்" என்பது, அரசமைப்பின் 239ஆம் உறுப்பின் கீழ் குடியரசுத்தலைவரால் பணியமர்த்தப்படுகிற புதுச்சேரி ஆட்சியாளர் எனப் பொருள்படும்;

(ஆ) "குறித்திட்ட நாள்" (appointed day) என்பது, ஒப்புவிப்பு உடன்படிக்கை (Treaty of cession) செயலாற்றலுக்கு வந்த தேதியாகிய 1962 ஆகஸ்ட் 16ஆம் நாள் எனப் பொருள்படும்;

(இ) "முந்தைய பிரஞ்சு குடியமர்வுகள்" (former French Establishments) என்பது, குறித்திட்ட நாளுக்கு முந்நாளிலிருந்து இந்தியாவிலுள்ள பிரஞ்சு குடியமர்வுகளில் உள்ளடக்கியிருந்த புதுச்சேரி, காரைக்கால், மாஹி மற்றும் ஏனாம் என்றழைக்கப்படும் ஆட்சிப்பரப்புகள் எனப் பொருள்படும்;

(ஈ) "உயர்நீதிமன்றம்" என்பது, சென்னை உயர் நீதிமன்றம் எனப் பொருள்படும்;

(உ) "சட்டம்" (law) என்பது, ஏதேனும் சட்டம் (Act), அவசரச்சட்டம், ஒழுங்குமுறை விதி, விதி, ஆணை, துணைவிதி, தீர்ப்பாணை அல்லது சட்ட ஆற்றல் கொண்டிருக்கிற பிற வகையம் (அது எப்பெயரில் அழைக்கப்பட்டாலும்) எனப் பொருள்படும்;

(ஊ) "புதுச்சேரி" என்பது, முந்தைய பிரஞ்சு குடியமர்வுகளின் ஆட்சிப்பரப்புகளை உள்ளடக்கிய ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு எனப் பொருள்படும்;

(எ) "ஒப்புவிப்பு உடன்படிக்கை" (Treaty of Cession) என்பது, பிரஞ்சு குடியமர்வுகளைப் பிரான்சு முழு இறையாண்மையுடன் இந்தியாவிடம் ஒப்புவிப்புச் செய்தலை நிலைநாட்டுவதும், 1956 மே 28ஆம் நாளன்று பிரான்சு மற்றும் இந்தியாவுக்கும் இடையே முடிவாகச் செய்து கொள்ளப்பட்டதுமான உடன்படிக்கை எனப் பொருள்படும்.

3. **புதுச்சேரி தொடர்பான அலுவலர்கள் மற்றும் அலுவற்பணியாளர்கள்.**- புதுச்சேரி நிருவாகத்திற்குத் தேவைப்படலாகிற அத்தகைய அலுவலர்கள் மற்றும் அதிகாரஅமைப்புகளை அவ்வப்போது பணியமர்த்துவதற்கான மைய அரசு அதிகாரங்களுக்குப் பாதகமில்லாமல், அரசு அவை (Council of Government) மற்றும் பிரதிநிதித்துவப் பேரவை (Representative Assembly) உள்ளடங்கலாக, குறித்திட்ட நாளுக்கு முந்நாளில் இருந்து, அத்தகைய குடியமர்வுகள் அல்லது அவற்றின் பகுதி எதனின் நிருவாகம் தொடர்புடைய சட்டமுறை அலுவற்பணிகளைச் செலுத்தி வந்த, இந்தியாவிலோ முந்தைய பிரஞ்சு குடியமர்வுகளிலோ உள்ள அனைத்து நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்கள், அதிகாரஅமைப்புகள் மற்றும் அலுவலர்களும், ஏதேனும் அத்தகைய நீதிமன்றம், தீர்ப்பாயம், அதிகாரஅமைப்பு அல்லது அலுவலர் தொடர்பாக மைய அரசால் அல்லது ஆட்சியாளரால் எச்சமயத்திலும் பிறவாறாகக் கட்டளையிடப்பட்டிருந்தால் அன்றி, புதுச்சேரி நிருவாகம் தொடர்பாக அவரவருக்குரிய அதிகாரங்களையும் அதிகாரவரம்புகளையும் தொடர்ந்து செலுத்தவேண்டும் மற்றும்

அரசு தீர்மானிக்கலாகிறவாறு மாற்றியமைக்கப்பட்ட பதவிப்பெயர் ஏதேனும் இருப்பின் அத்தகைய பதவிப்பெயருடன் குறித்திட்ட நாளுக்கு முன்பு ஆற்றிவந்த அதேமுறையிலும் அதே அளவுக்கும் அவரவரது கடமைகளையும் அலுவற்பணிகளையும் ஆற்றுதல் வேண்டும்.

4. **தற்போதிருந்து வரும் சட்டங்களின் தொடர்வுறுகையும் அவற்றின் தழுவமைப்பும்**.- (1) முந்தைய பிரஞ்சு குடியமர்வுகளில் அல்லது அவற்றின் பகுதி எதிலும் குறித்திட்ட நாளுக்கு முந்நாளில் இருந்து செயலாற்றலில் இருந்து வந்த சட்டங்கள் அனைத்தும், தகுதிவாய்ந்த சட்டமன்றத்தினால் அல்லது பிற தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பினால் திருத்தியமைக்கப்படும் அல்லது நீக்கறவு செய்யப்படும் வரையில் (until amended or repealed) புதுச்சேரியில் தொடர்ந்து செயலாற்றல் கொண்டிருக்கும்:

வரம்புரையாக, அத்தகைய சட்டம் எதிலும் பிரஞ்சு குடியரசுத்தலைவர் அல்லது அரசு குறித்த சுட்டுகைகள் மைய அரசு குறித்த சுட்டுகைகளாகக் கொள்ளப்பட வேண்டும்; இந்தியாவிலுள்ள பிரஞ்சு குடியமர்வுகளின் ஆளுநர், இந்தியாவிலுள்ள பிரஞ்சு குடியமர்வுகளுக்கான குடியரசு ஆணையர், பிரஞ்சு குடியமர்வுகளுக்கான தலைமை ஆணையர், புதுச்சேரி மாநிலத் தலைமை ஆணையர் அல்லது புதுச்சேரித் தலைமை ஆணையர் குறித்த சுட்டுகைகளானவை புதுச்சேரி ஆட்சியாளர் குறித்த சுட்டுகைகளாகவும், மற்றும் புதுச்சேரி மாநிலம் குறித்த சுட்டுகைகள் புதுச்சேரி குறித்த சுட்டுகைகளாகவும் பொருள் கொள்ளப்பட வேண்டும்.

(2) புதுச்சேரி நிருவாகம் தொடர்பாக அத்தகைய சட்டம் எதனின் பொருந்துகையை எளிதாக்கும் நோக்கத்திற்காகவும் அத்தகைய சட்டம் எதனின் வகையங்களை அரசமைப்பு வகையங்களோடு இணக்கமுறச் செய்யும் நோக்கத்திற்காகவும், மைய அரசானது, குறித்திட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள்ளாக, ஓர் ஆணை வாயிலாக, அவசியமான அல்லது உகந்ததாகிற நீக்கறவு செய்தல் அல்லது திருத்தம் வாயிலாக, அத்தகைய தழுவமைவுகளையும்

மாற்றமைவுகளையும் (adaptations and modifications) செய்யலாம்; அதன் விளைவாக அத்தகைய சட்டம் ஒவ்வொன்றும் அவ்வாறு செய்யப்பட்ட தழுவமைவுகளுக்கும் மாற்றமைவுகளுக்கும் உட்பட்டுச் செயல்விளைவு கொண்டிருக்கும்.

5. **சொத்து மற்றும் சொத்துடைமைகள் (property and assets).-** ஐயப்பாட்டினைத் தவிர்க்கும் பொருட்டு, குறித்திட்ட நாளுக்கு முந்நாளில் இருந்து பிரஞ்சு குடியரசு அரசிடம் மேவிநின்ற சொத்து மற்றும் சொத்துடைமைகள் அனைத்தும், ஒப்புவிப்பு உடன்படிக்கையில் பிறவாறு வெளிப்படையாக வகைசெய்யப்பட்டவை நீங்கலாக, ஒன்றியத்திடம் மேவிநிற்கும் என ஈங்கிதனால் விளம்புகை செய்யப்படுகிறது.

6. **உரிமைகளும் கடப்பாடுகளும்.-** ஒப்புவிப்பு உடன்படிக்கையின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, முந்தைய பிரஞ்சு குடியமர்வுகளின் நிருவாகம் தொடர்பாக அல்லது அதிலிருந்து எழலாகிற பிரஞ்சு குடியரசு அரசின் உரிமைகள், கடப்பாடுகள், கடமைப் பொறுப்புகள் அனைத்தும், குறித்திட்ட நாளிலிருந்து மைய அரசின் உரிமைகள், கடப்பாடுகள் மற்றும் கடமைப் பொறுப்புகள் ஆகும்.

7. **இப்போதிருந்துவரும் வரிகள் தொடருதல்.-** முந்தைய பிரஞ்சு குடியமர்வுகளில் அல்லது அதன் பகுதி எதனிலும், குறித்திட்ட நாளுக்கு முந்நாளில் இருந்து சட்டமுறையாக விதிக்கப்பட்டுவந்த வரிகள், தீர்வைகள், மேல்வரிகள், கட்டணங்கள் அனைத்தும், தகுதிவாய்ந்த சட்டமன்றத்தினால் அல்லது பிற தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பினால் வேறு வகைமுறை செய்யப்படும்வரையில், புதுச்சேரியில் தொடர்ந்து விதிக்கப்படவேண்டும் மற்றும் அதே நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

8. **செய்சட்டங்களைப் புதுச்சேரிக்கு நீட்டிக்கச் செய்வதற்கான அதிகாரம்.-** மைய அரசானது, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, அந்த அறிவிக்கைத் தேதியின் போது மாநிலம் ஒன்றில் செயலாற்றலில் இருக்கிற செய்சட்டம் (enactment) எதனையும், அது பொருத்தம்

எனக்கருதலாகிற அத்தகைய வரையறைகள் மற்றும் மாற்றமைவுகளுடன் (restrictions and modifications) புதுச்சேரிக்கு நீட்டிக்கச் செய்யலாம்.

9. **சென்னை உயர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பினைப் புதுச்சேரிக்கு நீட்டித்தல்**.- 1962 நவம்பர் 6ஆம் நாளிலிருந்து சென்னை உயர் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு புதுச்சேரிக்கு நீட்டிக்கப்படுகிறது.

10. **உயர் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு**.- (1) 9ஆம் பிரிவின் வகையங்களின் பொதுப்பாங்குக்குப் பாதகமில்லாமல், முந்தைய பிரஞ்சு குடியமர்வுகள் பொறுத்தமட்டில், குறித்திட்ட நாளுக்கு முந்நாளில் இருந்து செயலாற்றலில் இருந்த சட்டத்தின் கீழ் உள்ளவாறு பிரஞ்சு உச்ச நீதிமன்றம், உயர்நிலை நடுவர் ஆணையம், நிருவாக உச்ச நீதிமன்றம் (the Cour de Cassation, the Cour Superieur d'Arbitrage and the Conseil d'Etat of France) ஆகியவற்றால் செலுத்தத்தக்கதாக இருந்த அத்தகைய அதிகாரவரம்புகள் அனைத்தையும் புதுச்சேரி பொறுத்தமட்டில் உயர்நீதிமன்றம் பெற்றிருக்கும்:

வரம்புரையாக, புதுச்சேரியிலுள்ள நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாணையங்களின் முடிபுகளிலிருந்து எழுகிற மேல்முறையீடுகளைத் தீர்மானிக்கையில், உயர்நீதிமன்றம், தமிழ்நாடு மாநிலத்திலுள்ள Subs. by Madras State (Altration of Name) A Lo., 1970 (G.S.R. 112 OF 1970) FOR "Madras" (State of Madras) நீதிமன்றங்களின் முடிபுகளிலிருந்து எழுகிற மேல்முறையீடுகளைத் தீர்மானிக்கையில் எந்த நடைமுறையைப் பின்பற்றுகிறதோ மற்றும் அதன்பேரில் தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது ஆணை எதனையும் வழங்குவதற்கு எத்தகைய அதிகாரத்தைப் பெற்றிருக்கிறதோ, அதே நடைமுறையை இயன்ற அளவுக்குப் பின்பற்றுதல் வேண்டும் மற்றும் அதே அதிகாரத்தையும் பெற்றிருக்கும்.

(2) பிரான்ஸின் உச்ச நீதிமன்றம் அல்லது உயர்நிலை நடுவர் ஆணையம் அல்லது நிருவாக உச்ச நீதிமன்றம் (the Cour de Cassation or the Cour Superior d'Arbitrage or the Conseil d'Etat of France) முன்பாகவும் குறித்திட்ட நாளுக்கு முந்நாளில் இருந்து முடிவுறாமல் இருந்துவரும் முந்தைய பிரஞ்சு குடியமர்வுகளிலுள்ள நீதிமன்றம்

அல்லது தீர்ப்பாயம் எதனின் தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது ஆணையிலிருந்தோ அல்லது அது தொடர்பாகவோ எழுகிற மேல்முறையீடுகள் மற்றும் பிற நடவடிக்கைகள் அனைத்தும், மற்றும் அந்தக் குடியமர்வுகள் தொடர்பாக நிருவாக உச்சநீதிமன்றம் (Conseil d'Etat) முன்பு குறித்திட்ட நாளுக்கு முந்நாளில் இருந்து முடிவுறாமல் இருந்து வரும் மூல நடவடிக்கைகள் (original proceedings) அனைத்தும், இச்சட்டத்தின் பயன்திறனால், உயர் நீதிமன்றத்திற்கு மாற்றல் செய்யப்பட்டிருக்கும் மற்றும் அத்தகைய மேல்முறையீடுகள் மற்றும் பிற நடவடிக்கைகள் உயர் நீதிமன்றத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்டவை போன்றே அச்சட்டத்தினால் உயர் நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தி அதனால் தீர்வுமுறை செய்யப்பட வேண்டும்.

**விளக்கம்.-** குறித்திட்ட நாளுக்கு முன்பு தாக்கல் செய்யப்பட்டு, ஆனால் பிரஞ்சு உச்ச நீதிமன்றம், அல்லது உயர்நிலை நடுவர் ஆணையம், அல்லது நிருவாக உச்ச நீதிமன்றத்திற்கு (the Cour de Cassation or the Cour Superieur d'Arbitrage or Conseil d'Etat) மாற்றல் செய்யப்பட்டிராத மேல்முறையீடுகள் மற்றும் பிற நடவடிக்கைகள் அனைத்தும், இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்காக அந்த நீதிமன்றத்தின் முன்பு முடிவுறாமலுள்ள மேல்முறையீடுகள் அல்லது நேர்வுக்கேற்ப நடவடிக்கைகள் எனக் கொள்ளப்படவேண்டும்.

11. **உயர் நீதிமன்றத்தில் பணித்தொழிலாற்ற உரிமைப்பாடுடைய வழக்குரைஞர்கள்.-** 1961ஆம் ஆண்டு வழக்குரைஞர்கள் சட்டத்தில் (25/1961) அடங்கிய எது எவ்வாறிருப்பினும், ஆனால், உயர் நீதிமன்றத்தினால் வனைந்துருவாக்கலாகிற அத்தகைய விதிகளுக்கு உட்பட்டு, புதுச்சேரியில் உள்ள உயர் நீதிமன்றத்தின் (Tribunal Superieur d'Appeal) முன்பு பணித்தொழிலாற்ற உரிமைப்பாடுடைய எவரொருவரும், புதுச்சேரியிலிருந்து உயர் நீதிமன்றத்தின் முன்பு வருகிற வழக்குகள் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் பணித்தொழிலாற்ற உரிமைப்பாடுடைய வழக்குரைஞராக அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

12. **விதிகளைச் செய்வதற்கான உயர் நீதிமன்றத்தின் அதிகாரம். -** உயர் நீதிமன்றம் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது ஏதொன்றுக்கும் வகையம் செய்வதற்காக, இச்சட்டத்துடன் ஒத்திருக்கிற விதிகளை அவ்வப்போது செய்யலாம், அவையாவன:-

(அ) உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிற ஆவணத்தாள்கள் (papers) எதனையும் மொழிபெயர்த்தல், மற்றும் அனைத்து மேல்முறையீடுகளைக் கேட்பதற்கான ஆவணத்தாள் புத்தகங்களைத் (paper books) தயாரித்தல் மற்றும் அத்தகைய ஆவணத்தாள்கள் எதனையும் படியெடுத்தல், தட்டச்சு செய்தல் அல்லது அச்சிடுதல், மற்றும் எவருடைய வேண்டுகோளின் பேரில் அல்லது எவர் சார்பாக ஆவணத்தாள்கள் தாக்கல் செய்யப்படுகின்றனவோ அதற்காக செய்ய நேர்ந்த செலவுத்தொகைகளை அந்த நபர்களிடமிருந்து வசூலித்தல்;

(ஆ) உயர் நீதிமன்றத்தில் நடவடிக்கைகளைத் தொடுப்பதற்காகச் செலுத்தத்தக்க நீதிமன்றக் கட்டணங்கள், உயர் நீதிமன்றத்தால் அல்லது நீதிமன்ற அலுவலர் எவராலும் பிறப்பிக்கப்படும் நீதிமுறைக் கட்டளைகளுக்காக (processes) விதிக்கப்பட வேண்டிய கட்டணங்கள், மற்றும் அத்தகைய நடவடிக்கைகளின் தரப்பினர் ஒருவருடைய வழக்குரைஞர் கட்டணம் பொறுத்து உயர் நீதிமன்றத்தில் செய்யப்படும் நடவடிக்கை எதனிலும் செலுத்தத்தக்க தொகை;

(இ) உயர் நீதிமன்றத்தில் கடைப்பிடிக்கப் படவேண்டிய நடைமுறை;

(ஈ) புதுச்சேரி வழக்குரைஞர்கள் குறித்து ஒப்புதலளித்தல், சேர்த்துக்கொள்ளல், பட்டியலில் சேர்த்தல், நீக்குதல் மற்றும் இடைநீக்கம் செய்தல்.

13. **குறித்தசில ஆணைகள் மற்றும் தீர்ப்பாணைகளைச் செல்லத்தக்கவையாக்குதல்.**- (1) முந்தைய பிரஞ்சு குடியமர்வுகளில் உள்ள நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது பிற அதிகாரஅமைப்பு எதனின் தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது ஆணையிலிருந்து எழுகிற அல்லது அது பொறுத்த மேல்முறையீடு அல்லது பிற நடவடிக்கை எதிலும், 1954 நவம்பர் முதலாம் நாளன்று தொடங்கிக் குறித்திட்ட நாளன்று முடிவுறுகிற காலஅளவின் போது, பிரஞ்சு உச்ச நீதிமன்றம் அல்லது உயர்நிலை நடுவர் ஆணையம் அல்லது நிருவாக உச்ச நீதிமன்றத்தால் (Cour de Cassation, the Cour Superieur d'Arbitrage or Conseil d'Etat of France) செய்யப்பட்டதாகத்

தென்படுகிற ஆணை அல்லது தீர்ப்பாணை ஒவ்வொன்றும், சட்டத்திற்கிணங்கியவாறு செல்லும்நிலையில் செய்யப்பட்டிருப்பதாகக் கொள்ளப்பட வேண்டும் மற்றும் அனைத்து நோக்கங்களுக்காகவும் இச்சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரவரம்பினைச் செலுத்தி உயர் நீதிமன்றத்தால் செய்யப்படும் ஓர் ஆணை அல்லது ஒரு தீர்ப்பாணை போன்றே செயல்விளைவு கொண்டிருக்கும்.

(2) (1)ஆம் உட்பிரிவில் அடங்கிய எது எவ்வாறிருப்பினும், முந்தைய பிரஞ்சு குடியமர்வுகளின் நிருவாகத்தின் வாயிலாக அனுப்பப்படும் அழைப்பாணைகள் சார்வு செய்யப்படாமை காரணமாகப் பிரான்சு நீதிமன்றம் எதிலும் நடைபெறும் வழக்கு எதிலும் பிரதிவாதி முன்னிலையாவதற்கான வாய்ப்பு ஏதும் அளிக்கப்பட்டிராமல், அந்த நீதிமன்றத்தால் அந்த வழக்கில் 1960 மார்ச்சு 17க்குப் பிறகு முடிபு ஏதும் எடுக்கப்பட்டிருக்கிறவிடத்து, அத்தகைய முடிபு ஒரு போதும் எடுக்கப்பட்டிருக்கவில்லை எனக் கொள்ளப்படுதல் வேண்டும்; மேலும் எந்த நீதிமன்றத்தால் அத்தகைய முடிபு எடுக்கப்பட்டதோ அந்த நீதிமன்றத்தின் முன்பு முடிவுறாநிலையில் இருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அதற்கிணங்க அந்த வழக்கானது உயர் நீதிமன்றத்திற்கு அல்லது நேர்வுக்கேற்பப் பிரான்சில் உள்ள எந்த நீதிமன்றத்தின் முன்பாக முடிவுறாநிலையில் உள்ளதாகக் கொள்ளப்பட்டதோ அந்த நீதிமன்றத்திற்கு நேரிணையானதாகப் புதுச்சேரியில் உள்ள நீதிமன்றத்திற்கு மாற்றல் செய்யப்பட்டதாக அமையும்.

(3) 1962 நவம்பர் 6ஆம் நாளுக்கு பின்பு கூடியவிரைவில், ஆட்சியாளர், (2) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்டவாறான அத்தகைய வழக்கு ஒவ்வொன்றின் ஆவணஏட்டினை, அந்தவழக்கில் அழைப்பாணைகள் பிரதிவாதிக்குச் சார்வு செய்யப்படவில்லை என்னும் சான்றிதழுடன், உயர் நீதிமன்றத்திற்கு அல்லது நேர்வுக்கேற்ப நேரிணையான நீதிமன்றத்திற்கு மாற்றல் செய்தல் வேண்டும்.

1¬. **மேல்முறையீடுகளுக்கான காலவரம்பீடு.**- (1) உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடுகள் செய்வதற்கான காலவரம்பீட்டளவுகள் அடியிற்கண்டவாறு இருக்கும்:

| வரிசை எண் | மேல்முறையீடு பற்றிய விவரிப்பு | காலவரம்பீட்டு அளவுகள் | காலஅளவு எப்போதிலிருந்து தொடங்குகிறது |
|---|---|---|---|
| 1. | தீர்ப்புரை அல்லது ஆணை எதற்கும் எதிரான உரிமையியல் மேல்முறையீடுகள் | 90 நாட்கள் | தீர்ப்புரை அல்லது ஆணைத் தேதி |
| 2. | மரண தண்டனைக்கு எதிரான குற்றவியல் மேல்முறையீடு | 7 நாட்கள் | தண்டனைத்தீர்ப்புத் தேதி |
| 3. | மரண தண்டனைத் தீர்ப்பு அல்லாத பிற தண்டனைத் தீர்ப்பு அல்லது ஆணைக்கு எதிரான குற்றவியல் மேல்முறையீடு | 30 நாட்கள் | தண்டனைத்தீர்ப்பு அல்லது ஆணைத் தேதி |
| 4. | விடுதலை ஆணைக்கு எதிரான குற்றவியல் மேல்முறையீடு | 90 நாட்கள் | விடுதலை ஆணைத் தேதி |
| 5. | பிரஞ்சு தொழிலாளர் சட்டத் தொகுப்பு, 1952இன் 207ஆம் பிரிவின் கீழ்வரும் தொழிலாளர் மேல்முறையீடு | 30 நாட்கள் | தீர்ப்புரை அல்லது ஆணைத் தேதி |
| 6. | பிரஞ்சு தொழிலாளர் சட்டத்தொகுப்பு, 1952இன் 216ஆம் பிரிவின் கீழ்வரும் தொழிலாளர் மேல்முறையீடு | 30 நாட்கள் | வல்லுநரின் அறிக்கையும் பரிந்துரையும் எந்தத் தேதியன்று, மேல்முறையீடு செய்யும் தரப்பினருக்கு அளிக்கப்பட்டதோ அந்தத் தேதி |
| 7. | புதுச்சேரியில் உள்ள நிருவாகத் தீர்ப்பாயத்தின் தீர்ப்புரை அல்லது ஆணைக்கு எதிரான மேல்முறையீடு | 90 நாட்கள் | தீர்ப்புரை அல்லது ஆணைத் தேதி |

(2) ஒரு மரணதண்டனைத் தீர்ப்புக்கு எதிரான குற்றவியல் மேல்முறையீட்டு வழக்கைத் தவிர, காலவரம்பீட்டளவைக் கணக்கிடுகையில், எந்தத் தீர்ப்புரை, ஆணை, அறிக்கை மற்றும் நேர்வுக்கேற்ப பரிந்துரைக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்படுகிறதோ அந்தத் தீர்ப்புரை, ஆணை, அறிக்கை மற்றும் பரிந்துரையின் உறுதிச்சான்றளிக்கப்பட்ட படியைப் பெறுவதற்காக எடுத்துக் கொண்ட காலஅளவு நீக்கப்பட வேண்டும்.

(3) தீர்ப்புத்தண்டனையின் கீழ் சிறைவைப்பிலுள்ள குற்றஞ்சாட்டப்பட்டவரால், மேல்முறையீடு ஒன்று செய்யப்படுகிற நேர்வில், அவர் தாம் சிறைவைக்கப்பட்டுள்ள சிறைச்சாலைக் கண்காணிப்பாளரிடம் எந்தத் தேதியன்று மேல்முறையீட்டு விவரக்குறிப்பை அளிக்கிறாரோ அந்தத் தேதியை உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீட்டை முன்னிடுகிற தேதி எனக் கொள்ளப்பட வேண்டும்.

(4) வகுத்துரைக்கப்பட்ட காலவரம்பீட்டளவுக்குள் மேல்முறையீட்டாளர் மேல்முறையீடு செய்யாததற்குப் போதிய காரணம் கொண்டிருப்பதாக நீதிமன்றத்தை மனநிறைவு கொள்ளச் செய்யும் நிலையில், அத்தகைய காலவரம்பீட்டளவுக்குப் பின்பு கூட அம்மேல்முறையீடு அனுமதிக்கப்படலாம்.

15. **குறித்தசில வழக்குகளில் காலவரம்பீட்டுக்குக் காப்புரை.**- 14ஆம் பிரிவின் கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் காலவரம்பீட்டளவைக் கணக்கிடுகையில், உயர் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு புதுச்சேரிக்கு நீட்டிக்கப்பட்டிராத காரணத்தால் எந்தக் காலஅளவின்போது மேல்முறையீடு தாக்கல்செய்ய இயலவில்லையோ அல்லது நடவடிக்கை தொடுக்கப்பட இயலவில்லையோ அந்தக் காலஅளவு எதுவும் நீக்கப்பட வேண்டும்.

16. **சொற்பொருள்கோள் விதி.**- பிரஞ்சு உச்ச நீதிமன்றம், உயர்நிலை நடுவர் நீதிமன்றம் அல்லது நிருவாக உச்ச நீதிமன்றம் (the Cour de Cassation, the Cour Superieur d'Arbitrage or the Conseil d'Etat) குறித்து புதுச்சேரியில் செயலாற்றலில் உள்ள சட்டம் எதிலுமுள்ள சுட்டுகைகள், உயர் நீதிமன்றம் குறித்த சுட்டுகைகளாகவே பொருள்கொள்ளப்பட வேண்டும்.

17. **சட்டங்களைப் பொருள்கொள்வதற்கான அதிகாரம்.-** புதுச்சேரி தொடர்பாக ஏதேனும் சட்டத்தின் பொருந்துகையை எளிதாக்கும் நோக்கத்திற்காக, நீதிமன்றம் அல்லது பிற அதிகாரஅமைப்பு எதுவும், அத்தகைய சட்டம் எதனையும் அதன் உட்பொருள் பாதிக்கப்படாத அத்தகைய முறையில், நீதிமன்றம் அல்லது பிற அதிகாரஅமைப்புக்கு முன்புள்ள பொருட்பாட்டுக்கு அதனைத் தழுவியமைப்பதற்கு அவசியமானதாகலாம் அல்லது முறையானதாகலாம் என்று பொருள்கொள்ளலாம்.

18. **பிற சட்டங்களின் செயல்விளைவு.-** புதுச்சேரியில் செயலாற்றலில் உள்ள வேறு ஏதேனும் சட்டத்தில் அடங்கியுள்ளதுடன் ஒவ்வாதிருக்கிற எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் வகையங்கள் செயல்விளைவு கொண்டிருக்கும்.

19. **இடர்ப்பாடுகளைக் களைவதற்கான அதிகாரம்.-** (1) இச்சட்டத்தின் வகையங்களுக்குச் செயல்விளைவளிப்பதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமாயின், மைய அரசானது, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படுகிற ஆணை வாயிலாக, அத்தகைய இடர்ப்பாட்டினைக் களைவதற்கு அவசியமானதாக அல்லது உகந்ததாக அதற்குத் தோன்றலாகிற அத்தகைய வகையங்கள் எதனையும் செய்யலாம்.

(2). (1)ஆம் உட்பிரிவின் கீழான ஆணை எதனையும், குறித்திட்ட நாளைவிட முன்னதாக இல்லாத எந்தத் தேதியிலிருந்தும் முன்னுறுவிளைவு கொண்டிருக்குமாறு செய்யலாம்.

20. **நீக்கறவும் காப்புரையும்.-** (1) 1962ஆம் ஆண்டு புதுச்சேரி (நிருவாகம்)அவசரச்சட்டம் (8/1962) ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது.

(2) அத்தகைய நீக்கறவு எவ்வாறிருப்பினும், அந்த அவசரச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

## இந்திய அரசமைப்பு

## [1]பகுதி VIII

## [2][ஒன்றியத்து ஆட்சிப்பரப்புகள்]

ஒன்றியத்து ஆட்சிப்பரப் புகளின் நிருவாகம்.

[1]239. (1) நாடாளுமன்றத்தால் சட்டத்தின் வாயிலாகப் பிறவாறாக வகைசெய்யப்பட்டவாறு அல்லாமல், ஒவ்வொரு ஒன்றியத்து ஆட்சிப்பரப்பும், குடியரசுத்தலைவரால், அவர் குறித்திடலாகிற அத்தகைய பதவிப்பெயருடன் அவரால் பணியமர்த்தப்பட வேண்டிய ஓர் ஆட்சியாளர் மூலம், அவர் பொருத்தமெனக் கருதுகிற அத்தகைய அளவுக்கு, ஆட்சி செய்யப்படுதல் வேண்டும்.

(2) பகுதி–VI இல் அடங்கிய எது எவ்வாறிருப்பினும், குடியரசுத்தலைவர் ஒரு மாநிலத்தின் ஆளுநரை அந்த மாநிலத்தை ஒட்டியுள்ள ஓர் ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் ஆட்சியாளராகப் பணியமர்த்தலாம்; மற்றும் ஓர் ஆளுநர் அவ்வாறு பணியமர்த்தப்படுகிறார் என்கிறவிடத்து, அவர் தமது அமைச்சரவையின் சார்பு இல்லாமலேயே அத்தகைய ஆட்சியாளராகத் தமது அலுவற்பணிகளை ஆற்றுதல் வேண்டும்.

*1. 1956ஆம் ஆண்டு அரசமைப்புச் (ஏழாம் திருத்தம்) சட்டத்தின் பிரிவு 17 வாயிலாக மூல முதல் உறுப்புகள் 239 மற்றும் 240க்கு மாற்றாக அமைக்கப்பட்டது.*

### குறித்தசில ஒன்றியத்து ஆட்சிப்பரப்புகளுக்காக உள்ளூர்ச் சட்டமன்றங்களை அல்லது அமைச்சரவை அல்லது இரண்டையும் தோற்றுவித்தல்

[1][239A.(1) நாடாளுமன்றம் சட்டத்தின் வாயிலாக [2]..................[3]..................... [4](கோவா, டாமண் மற்றும் டையூ), [5](புதுச்சேரி, மிசோரம் மற்றும் அருணாசலப் பிரதேசம்) ஒன்றியத்து ஆட்சிப்பரப்புகளில் ஏதொன்றுக்காகவும்]-

(a) ஒன்றியத்து ஆட்சிப்பரப்புக்கான சட்டமன்றமாக அலுவற்பணியாற்றுவதற்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பகுதியளவு பெயர்சுட்டியமர்த்தப்பட்டும் பகுதியளவு தேர்ந்தெடுக்கப்பட்டும் உள்ள ஒரு குழுமத்தை, அல்லது

(b) ஓர் அமைச்சரவையை,

அல்லது இரண்டையும், ஒவ்வொரு நேர்விலும் அந்தச் சட்டத்தில் குறித்துரைக்கப்படலாகிற அத்தகைய கட்டமைப்பு, அதிகாரங்கள், அலுவற்பணிகள் ஆகியவற்றுடன் தோற்றுவிக்கலாம்.

(2). (1)ஆம் பிரிவுக்கூறில் சுட்டப்பட்டுள்ள அத்தகைய சட்டம் எதுவும், இந்த அரசமைப்பைத் திருத்துகிற அல்லது திருத்தும் செயல்விளைவுடைய வகைமுறை எதனையும் அது அடக்கியிருப்பினும், 368ஆம் உறுப்பின் நோக்கங்களுக்காக, இந்த அரசமைப்பின் ஒரு திருத்தம் எனக் கொள்ளப்படுதல் ஆகாது.]

---

1. *அரசமைப்பு (பதினான்காம் திருத்தம்) சட்டம், 1962, பிரிவு 4 வாயிலாகப் புகுத்தப்பட்டது.*

2. *இமாச்சலப் பிரதேச மாநிலச் சட்டம், 1970 (53/1970), பிரிவு 46 வாயிலாக (25-1-1971 முதல் செயல்விளைவுக்கு வருமாறு), ''இமாச்சலப்பிரதேசம்'' என்னும் சொற்கள் விட்டு விடப்பட்டன.*

3. *வடகிழக்குப் பரப்பிடங்கள் (மறு சீரமைப்பு) சட்டம், 1971 (81/1971), பிரிவு 71 வாயிலாக (21-1-1972 முதல் செயல்விளைவுக்கு வருமாறு), ''மணிப்பூர், திரிபுரா'' என்னும் சொற்கள் விட்டுவிடப்பட்டன.*

4. *அரசமைப்பு (இருபத்தேழாம் திருத்தம்) சட்டம், 1971, பிரிவு 2 வாயிலாக (15-2-1972 முதல் செயல்விளைவுக்கு வருமாறு), ''கோவா, டாமண், டையூ மற்றும் புதுச்சேரி'' என்பதற்கு மாற்றாக அமைக்கப்பட்டது.*

5. *அரசமைப்பு (இருபத்தேழாம் திருத்தம்) சட்டம், 1971, பிரிவு 2 வாயிலாக, ''புதுச்சேரி மற்றும் மிசோராம்'' என்பதற்கு மாற்றாக அமைக்கப்பட்டது.*

### சட்டமன்ற இடைஓய்வுக் காலத்தின்போது அவசரச்சட்டங்களைச் சாற்றுகை செய்ய ஆட்சியாளரின் அதிகாரம்

[1][239B. (1) 239A உறுப்பின் (1)ஆம் பிரிவுக்கூறில் சுட்டப்பட்டுள்ள ஓர் ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் சட்டமன்றம் அமர்வில் இருக்கும்போது தவிர, எச்சமயத்திலும், அதன் ஆட்சியாளர் தாம் உடனடியாகச் செயல்மேற்கொள்வதற்குத் தேவையான சூழல்கள் இருக்கின்றன என மனநிறைவு கொள்கிறார் என்றால், அச்சூழல்கள் வேண்டுறுத்துவதாக அவருக்குத் தோன்றுகிற அத்தகைய அவசரச்சட்டங்களை அவர் சாற்றுகை செய்யலாம்:

ஆனால், அத்தகைய அவசரச்சட்டம் எதுவும், அதற்கெனக் குடியரசுத்தலைவரிடம் இருந்து அறிவுறுத்தங்களைப் பெற்றபின்பு தவிர, ஆட்சியாளரால் சாற்றுகை செய்யப்படுதல் ஆகாது:

மேலும், மேற்சொன்ன சட்டமன்றம் கலைக்கப்படும் போதெல்லாம், அல்லது 239A உறுப்பின் (1)ஆம் பிரிவுக்கூறில் சுட்டப்பட்ட அத்தகைய சட்டம் எதன் கீழும் மேற்கொள்ளப்பட்ட செயல் எதனின் பொருட்டு அதன் அலுவற்பணி நடப்பது இடைநிறுத்திவைக்கப்பட்டிருக்கும் போதெல்லாம், அத்தகைய கலைப்பு அல்லது இடைநிறுத்திவைப்புக் காலஅளவின்போது அவசரச்சட்டம் எதனையும் ஆட்சியாளர் சாற்றுகை செய்தல் ஆகாது.

(2) குடியரசுத்தலைவரின் அறிவுறுத்தங்களை அடியொற்றி இந்த உறுப்பின் கீழ் சாற்றுகை செய்யப்பட்ட ஓர் அவசரச்சட்டம், 239A உறுப்பின் (1)ஆம் பிரிவுக்கூறில் சுட்டப்பட்ட அத்தகைய சட்டம் எதிலும் அதற்கென அடங்கியுள்ள வகையங்களுக்கு இணங்கி நடந்தபின்பு உரியவாறு இயற்றப்பட்டிருக்கிற ஒன்றியத்து ஆட்சிப்பரப்புச் சட்டமன்றத்தின் ஒரு சட்டம் எனக் கொள்ளப்படுதல் வேண்டும்; அத்தகைய அவசரச்சட்டம் ஒவ்வொன்றும்-

---

*1. அரசமைப்பு (இருபத்தேழாம் திருத்தம்) சட்டம், 1971, பிரிவு 3 வாயிலாக (30-12-1971 முதல் செயல்விளைவுக்கு வருமாறு) புகுத்தப்பட்டது.*

(அ) ஒன்றியத்து ஆட்சிப்பரப்புச் சட்டமன்றத்தின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அந்தச் சட்டமன்றத்தின் மறுகூட்டத்திலிருந்து ஆறு வாரம் முடிவுறுகையில் அல்லது அந்தக் காலஅளவு முடிவுறுவதன் முன்பு அதை ஒப்பமறுக்கிற ஒரு மன்றத்தீர்மானம் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படுகிறது என்றால், அந்த மன்றத்தீர்மானம் நிறைவேற்றப்படுவதன் பேரில், அந்த அவசரச்சட்டம் செயல்படுவது அற்றுப்போதல் வேண்டும்; மற்றும்

(ஆ) குடியரசுத்தலைவரிடமிருந்து அதற்கென அறிவுறுத்தங்களைப் பெற்ற பின்பு ஆட்சியாளரால் எச்சமயத்திலும் திரும்பப்பெறப்படலாம்.

(3) 239A உறுப்பின் (1)ஆம் பிரிவுக்கூறில் சுட்டப்பட்ட அத்தகைய சட்டம் எதிலும் அதற்கென அடங்கியுள்ள வகைமுறைகளுக்கு இணங்கி நடந்த பின்பு செய்யப்பட்ட ஒன்றியத்து ஆட்சிப்பரப்புச் சட்டமன்றத்தின் சட்டம் ஒன்றில் எந்த வகைமுறை இயற்றப்பட்டிருந்தால் அது செல்லத்தகாததாக இருந்திருக்குமோ அந்த வகைமுறை எதனையும் இந்த உறுப்பின் கீழான ஓர் அவசரச்சட்டம் செய்கிறது என்றால், எந்த அளவுக்குச் செய்கிறதோ அந்த அளவுக்கு அது விழலாதல் வேண்டும்.]

[1][(4) அரசமைப்பில் உள்ள எது எவ்வாறிருப்பினும், (1)ஆம் பிரிவுக்கூறில் குறிப்பிடப்பட்ட ஆட்சியாளர் மனநிறைவு கொள்வதே அறுதியானதும் மற்றும் அறுதிமுடிவானதும் ஆகும் மற்றும் எக்காரணம் கொண்டும் நீதிமன்றம் எதனிலும் வினவப்படக்கூடாது.]

---

*1. அரசமைப்பு (முப்பத்தெட்டாம் திருத்தம்) சட்டம்,1975, பிரிவு 4 வாயிலாக (முன்னுறுவிளைவுடன்) புகுத்தப்பட்டது.*

## குறித்தசில ஒன்றியத்து ஆட்சிப்பரப்புகளுக்காக ஒழுங்குமுறைவிதிகளைச் செய்யக் குடியரசுத்தலைவரின் அதிகாரம்

240. (1) குடியரசுத்தலைவர் -

(a) அந்தமான்- நிக்கோபார்த் தீவுகள்;

[1][(b) இலட்சத்தீவு;]

[2][(c) தாத்ரா-நாகர் ஹவேலி;]

[3][(d) கோவா, டாமண் மற்றும் டையூ;]

[4][(e) புதுச்சேரி;]

[5][(f) மிசோரம்;

(g) அருணாசலப் பிரதேசம்]

ஆகிய ஒன்றியத்து ஆட்சிப்பரப்புகளின் அமைதி, முன்னேற்றம், நல்லாட்சி ஆகியவற்றுக்காக ஒழுங்குமுறைவிதிகளைச் செய்யலாம்:

[6][ஆனால், [7](கோவா, டாமண் மற்றும் டையூ), [8](புதுச்சேரி, மிசோரம் அல்லது அருணாசலப் பிரதேச ஒன்றியத்து ஆட்சிப்பரப்புச்) சட்டமன்றமாக அலுவற்பணியாற்றுவதற்கு 239A உறுப்பின் கீழ் குழுமம் எதுவும் தோற்றுவிக்கப்பட்டிருக்கிற போது, குடியரசுத்தலைவர், அந்தச் சட்டமன்றத்தின் முதலாவது கூட்டத்திற்காகக் குறித்திட்ட தேதியிலிருந்து செயல்விளைவுக்கு வருமாறு, அந்த ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் அமைதி, முன்னேற்றம், நல்லாட்சி ஆகியவற்றுக்காக ஒழுங்குமுறைவிதி எதனையும் செய்தல் ஆகாது:]

---

1. *இலக்கத்தீவு, மினிக்காய் மற்றும்அமிந்திவி தீவுகள் (பெயர் மாற்றுகை) சட்டம், 1973 (34/1973), பிரிவு 4 வாயிலாக (1-11-1973 முதல் செயல்விளைவுக்கு வருமாறு), "(b) இலக்கத்தீவு, மினிக்காய் மற்றும் அமிந்திவி தீவுகள்;" என்பதற்கு மாற்றாக அமைக்கப்பட்டது.*
2. *அரசமைப்பு (பத்தாம் திருத்தம்) சட்டம், 1961, பிரிவு 3 வாயிலாகப் புகுத்தப்பட்டது.*
3. *அரசமைப்பு (பன்னிரண்டாம் திருத்தம்) சட்டம், 1962, பிரிவு 3 வாயிலாகப் புகுத்தப்பட்டது.*
4. *அரசமைப்பு (பதினான்காம் திருத்தம்) சட்டம், 1962, பிரிவுகள் 5 மற்றும் 7 வாயிலாக (16-8-1962 முதல் செயல்விளைவுக்கு வருமாறு) புகுத்தப்பட்டது.*
5. *அரசமைப்பு (இருபத்தேழாம் திருத்தம்) சட்டம், 1971, பிரிவு 4 வாயிலாகப் புகுத்தப்பட்டது.*
6. *அரசமைப்பு (பதினான்காம் திருத்தம்) சட்டம், 1962, பிரிவு 5 வாயிலாகப் புகுத்தப்பட்டது.*
7. *அரசமைப்பு (இருபத்தேழாம் திருத்தம்) சட்டம், 1971, பிரிவு 4 வாயிலாக, "கோவா, டாமண் மற்றும் டையூ அல்லது புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு" என்பதற்கு மாற்றாக (15-2-1972 முதல் செயல்விளைவுக்கு வருமாறு) அமைக்கப்பட்டது.*
8. *அரசமைப்பு (முப்பத்தேழாம் திருத்தம்) சட்டம், 1975, பிரிவு 3 வாயிலாக "புதுச்சேரி அல்லது மிசோரம்" என்பதற்கு மாற்றாக அமைக்கப்பட்டது.*

[1][மேலும், கோவா, டமண் மற்றும் டையூ, [2](புதுச்சேரி, மிசோரம் அல்லது அருணாசலப் பிரதேச) ஒன்றியத்து ஆட்சிப்பரப்புச் சட்டமன்றமாக அலுவற்பணியாற்றுகிற குழுமம் கலைக்கப்படுகிற போதெல்லாம், அல்லது அத்தகைய சட்டமன்றமாக அலுவற்பணியாற்றும் அந்தக் குழுமம் 239A உறுப்பின் (1)ஆம் பிரிவுக்கூறில் சுட்டப்பட்ட அத்தகைய சட்டம் எதனின் கீழும் மேற்கொள்ளப்பட்ட செயல் எதன் பொருட்டும் இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கிற போதெல்லாம், குடியரசுத்தலைவர், அத்தகைய கலைப்பு அல்லது இடைநீக்கக் காலஅளவின் போது அந்த ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் அமைதி, முன்னேற்றம், நல்லாட்சி ஆகியவற்றுக்காக ஒழுங்குமுறைவிதிகளைச் செய்யலாம்.]

(2) அவ்வாறு செய்யப்பட்ட ஒழுங்குமுறைவிதி எதுவும், அப்போதைக்கு அந்த ஒன்றியத்து ஆட்சிப்பரப்புக்குப் பொருந்தத்தக்கதாயுள்ள நாடாளுமன்றம் செய்த சட்டம் (Act) எதனையும் அல்லது [3][பிறசட்டம் (law) எதனையும்] நீக்கறவோ திருத்தமோ செய்யலாம்; மற்றும் அது குடியரசுத்தலைவரால் சாற்றுகை செய்யப்படும்போது, அந்த ஆட்சிப்பரப்புக்குப் பொருந்துகிற ஒரு நாடாளுமன்றச் சட்டத்தைப் போன்று அதே செயலாற்றலையும் செயல்விளைவையும் கொண்டிருக்கும்.

---

*1. அரசமைப்பு (இருபத்தேழாம் திருத்தம்) சட்டம், 1971, பிரிவு 4 வாயிலாகப் புகுத்தப்பட்டது.*

*2. அரசமைப்பு (முப்பத்தேழாம் திருத்தம்) சட்டம், 1975, பிரிவு 3 வாயிலாகப் "புதுச்சேரி அல்லது மிசோரம்" என்பதற்கு மாற்றாக அமைக்கப்பட்டது.*

*3. அரசமைப்பு (இருபத்தேழாம் திருத்தம்) சட்டம், 1971, பிரிவு 4 வாயிலாக, "கோவா, டாமண் மற்றும் டையூ அல்லது புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு" என்பதற்கு மாற்றாக (15-2-1972 முதல் செயல்விளைவுக்கு வருமாறு) அமைக்கப்பட்டது.*

## ஒன்றியத்து ஆட்சிப்பரப்புகளுக்கான உயர் நீதிமன்றங்கள்

241. (1) நாடாளுமன்றம் சட்டத்தின் வாயிலாக, ஓர் [1](ஒன்றியத்து ஆட்சிப்பரப்புக்காக) ஓர் உயர் நீதிமன்றத்தை அமைக்கலாம்; அல்லது [2](அத்தகைய ஆட்சிப்பரப்பு) எதிலுமுள்ள நீதிமன்றம் எதனையும் இந்த அரசமைப்பின் நோக்கங்கள் அனைத்திற்காகவும் அல்லது அவற்றில் எதற்காகவும் ஓர் உயர் நீதிமன்றம் ஆகும் என விளம்புகை செய்யலாம்.

(2) பகுதி -VIக்கான பகுதிப்பிரிவு-Vஇன் (Chapter V of Part VI) வகைமுறைகள், 214ஆம் உறுப்பில் சுட்டப்பட்ட ஓர் உயர் நீதிமன்றம் தொடர்பாகப் பொருந்துவன போன்று, (1)ஆம் பிரிவுக்கூறில் சுட்டப்பட்ட ஒவ்வொரு உயர் நீதிமன்றம் தொடர்பாகவும், நாடாளுமன்றம் சட்டத்தின் வாயிலாக வகைசெய்யலாகிற அத்தகைய மாற்றமைவுகளுக்கும் விதிவிலக்குகளுக்கும் உட்பட்டு, பொருந்துதல் வேண்டும்.

[3][(3) இந்த அரசமைப்பின் வகைமுறைகளுக்கும் இந்த அரசமைப்பின் வாயிலாக அல்லது கீழாக உரிய சட்டமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் பயன்திறனால் செய்யப்பட்ட அந்த சட்டமன்றச் சட்டம் எதனின் வகைமுறைகளுக்கும் உட்பட்டு, ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு எதனின் தொடர்பாகவும் 1956ஆம் ஆண்டு அரசமைப்பு (ஏழாம் திருத்தம்) சட்டத்தின் தொடக்கத்திற்கு முந்நாளிலிருந்து அதிகாரவரம்பு செலுத்திவந்த ஒவ்வொரு உயர் நீதிமன்றமும், அத்தகைய தொடக்கத்திற்குப் பின்பு அந்த ஆட்சிப்பரப்பு தொடர்பாக அத்தகைய அதிகாரவரம்பைத் தொடர்ந்து செலுத்தி வருதல் வேண்டும்.

(4) இந்த உறுப்பில் உள்ள எதுவும், ஒரு மாநிலத்திற்கான உயர் நீதிமன்றம் ஒன்றின் அதிகாரவரம்பை ஒன்றியத்து ஆட்சிப்பரப்புக்கு அல்லது அதன் பகுதி எதற்கும் அளாவச்செய்வதற்கோ அதனின்றும் நீக்குவதற்கோ நாடாளுமன்றத்தின் அதிகாரத்தைக் குன்றச் செய்யாது.]

242. (குடகு).- 1956ஆம் ஆண்டு அரசமைப்பு (ஏழாம் திருத்தம்) சட்டத்தின் 29ஆம் பிரிவினாலும் இணைப்புப்பட்டியலாலும் நீக்கறவு செய்யப்பட்டது.

---

*1. அரசமைப்பு (ஏழாம் திருத்தம்) சட்டம், பிரிவு 29 மற்றும் இணைப்புப்பட்டியல் வாயிலாக, "முதலாம் இணைப்புப்பட்டியலின் பகுதி-Cயில் குறித்துரைக்கப்பட்ட மாநிலம்" என்பதற்கு மாற்றாக அமைக்கப்பட்டது.*

*2. அதே சட்டத்தின் பிரிவு 29 மற்றும் இணைப்புப்பட்டியல் வாயிலாக, "அத்தகைய மாநிலம்" என்பதற்கு மாற்றாக அமைக்கப்பட்டது.*

*3. அதே சட்டத்தின் பிரிவு 29 மற்றும் இணைப்புப்பட்டியல் வாயிலாக மூலமுதல் பிரிவுக்கூறுகள் (3) மற்றும் (4) க்கு மாற்றாக அமைக்கப்பட்டது.*

1962 ஆம் ஆண்டு புதுச்சேரி (நிருவாகம்) சட்டம் (சட்ட எண் 49/1962) மேலேயுள்ள தமிழ் மொழிபெயர்ப்பானது, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (சட்ட எண் 50/1973) இன் பிரிவு 2இன் கூறு(அ) இன் கீழ் அதிகாரமுறை குடியரசுத் தலைவரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசுச் செயலாளர்.

The above The Puducherry (Administration) Act, 1962 (Act No. 49 of 1962) has been authorised by the President, under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (Act No. 50 of 1973).

Secretary to Government of India.

## புதுச்சேரி (சட்டங்கள் நீட்டிப்பு) சட்டம், 1968

## [The Puducherry (Extension of Laws) Act, 1968]

(சட்ட எண் 26/1968) (1968, மே 24)

புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்புக்குக் குறித்தசில மையச் சட்டங்களை நீட்டிப்பதற்கான ஒரு சட்டம்.

இது இந்தியக் குடியரசின் பத்தொன்பதாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் சட்டமியற்றப்படுவதாகுக:-

1. இச்சட்டம், 1968ஆம் ஆண்டு புதுச்சேரி (சட்டங்கள் நீட்டிப்பு) சட்டம் என அழைக்கப்பெறும். குறுந்தலைப்பு.

2. இச்சட்டத்தில் தறுவாய் பிறவாறு வேண்டுறுத்தினாலன்றி,- பொருள்-வரையறைகள்.

(அ) "சட்டம்" என்பது, இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட ஒரு சட்டம் அல்லது அவசரச்சட்டம் எனப் பொருள்படும்;

(ஆ) "ஆட்சியாளர்" என்பது, அரசமைப்பின் 239ஆம் உறுப்பின் கீழ் குடியரசுத்தலைவரால் பணியமர்த்தப்பட்ட புதுச்சேரி ஆட்சியாளர் எனப் பொருள்படும்;

(இ) "புதுச்சேரி" என்பது, புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு எனப் பொருள்படும்.

3. (1) ஆட்சிப்பரப்புகளுக்கு நீட்டிக்கப்பட்டு அங்கு பொதுவாகச் செயலாற்றலில் உள்ளவாறு இணைப்புப்பட்டியலில் பகுதி-I இல் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களும், (அவற்றுக்கெதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள மாநிலம் அல்லது ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் இருந்துவந்துள்ளவாறு) மற்றும் இணைப்புப்பட்டியலின் பகுதி-II இல் குறித்துரைக்கப்பட்ட சட்டங்களும், 1966, ஆகஸ்ட் 1 ஆம் தேதியன்று இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட மாற்றமைவுகள் எவையேனுமிருப்பின் அவற்றிற்கு உட்பட்டு, புதுச்சேரிக்கு நீட்டிக்கப்பட்டிருக்கும். குறித்தசில சட்டங்களைத் திருத்தங்களுடன் புதுச்சேரிக்கு நீட்டித்தலும் அதில் அவற்றின் தொடக்கமும்.

(2) உட்பிரிவு (1)இல் அல்லது அதன் தொடக்கத்திற்காக அத்தகைய சட்டம் ஒவ்வொன்றிலும் தொடர்புடைய வகையம் ஏதேனுமிருப்பின் அந்த வகையத்தில் அடங்கிய எது எவ்வாறிருப்பினும், அத்தகைய சட்டம் ஒவ்வொன்றின் வகையங்கள், ஆட்சியாளர் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று புதுச்சேரியில் செயலாற்றலுக்கு வரும்:

வரம்புரையாக, ஏதேனும் சட்டத்தின் வெவ்வேறு வகைத்தியற்காக வெவ்வேறு தேதிகள் குறித்திடப்படலாம் மற்றும் அச்சட்டத்தின் தொடக்கத்திற்கான அத்தகைய வகையத்தில் உள்ள சுட்டுகை எதுவும், அந்த வகையம் செயலாற்றலுக்கு வருவதற்கான ஒரு சுட்டுகையாகவே பொருள்கொள்ளப்படும்.

நீக்கறவு மற்றும் காப்புரை.

4. (1) பிரிவு 3இன் உட்பிரிவு (1)இல் சுட்டப்பட்டுள்ள சட்டம் எதற்கும் நேரிணையாகப் புதுச்சேரியில் அல்லது அதன் பரப்பிடம் எதனிலும் செயலாற்றலிலுள்ள சட்டம் எதுவும் அல்லது அதன் பகுதி எதுவும், [அத்தகைய சட்டம் இனமுறை துறந்தோர்க்குப் (renoncants) பொருந்துவது தொடர்ந்திருக்கும் அளவுக்குத் தவிர] புதுச்சேரியில் அத்தகைய சட்டம் செயலாற்றலுக்கு வருவது முதல் நீக்கறவு செய்யப்பட்டதாகும்.

(2) உட்பிரிவு (1)இல் உள்ள எதுவும்,-

(அ) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட சட்டம் எதனின் முந்திய செயற்பாட்டினை அல்லது அதன்கீழ் உரியவாறாகச் செய்யப்பட்ட அல்லது தீங்குற்ற எதனையும்; அல்லது

(ஆ) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட சட்டம் எதன் கீழும் ஈட்டப்பட்ட, சேர்ந்தடையப்பெற்ற அல்லது ஆட்பட்ட உரிமை, சிறப்புரிமை, கடமைப்பாடு அல்லது கடப்பாடு எதனையும்; அல்லது

(இ) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்ட சட்டம் எதற்கும் எதிராகச் செய்யப்பட்ட குற்றச்செயல் ஒன்றைப் பொறுத்தமட்டில் தண்டம், பறிமுதல் அல்லது தண்டனை எதனையும்; அல்லது

(ஈ) மேற்சொன்ன அத்தகைய உரிமை, சிறப்புரிமை, கடமைப்பாடு, கடப்பாடு, தண்டம், பறிமுதல் அல்லது தண்டனை பொறுத்தமட்டிலான புலனாய்வு, சட்ட நடவடிக்கைச்செயல் அல்லது பரிகாரம் எதனையும்,

பாதிக்கச் செய்யாது; மேலும், இச்சட்டம் இயற்றப்பட்டிருக்கவில்லை என்றாற்போன்றே, அத்தகைய புலனாய்வு, சட்ட நடவடிக்கைச்செயல் அல்லது பரிகாரம் எதுவும் தொடுக்கப்படலாம், தொடரப்படலாம் அல்லது செயலுறுத்தப்படலாம் மற்றும் அத்தகைய தண்டம், பறிமுதல் அல்லது தண்டனை எதுவும் விதிக்கப்படலாம்:

வரம்புரையாக, அத்தகைய சட்டம் எதன் கீழும் (செய்யப்பட்ட பணியமர்த்தம் அல்லது ஒப்படைவு, பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை, அறிவுறுத்தம் அல்லது கட்டளை, படிவம், துணைவிதி அல்லது வனைந்துருவாக்கப்பட்ட திட்டமுறை, பெறப்பட்ட சான்றிதழ், வழங்கப்பட்ட இசைவாணைச்சீட்டு அல்லது உரிமம், அல்லது

நிறைவேற்றப்பட்ட பதிவு உட்பட) செய்யப்பட்ட எதுவும் அல்லது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை எதுவும், இச்சட்டத்தினால் புதுச்சேரிக்கு நீட்டிக்கப்பட்ட சட்டத்தின் நேரிணையான வகையத்தின் கீழ் செய்யப்பட்டதாகவே அல்லது மேற்கொள்ளப்பட்டதாகவே கொள்ளப்படவேண்டும்; மேலும் மேற்சொன்ன சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட எதனாலும் அல்லது மேற்கொள்ளப்பட்ட எதனாலும் தள்ளறவு செய்யப்பட்டாலன்றியும் அல்லது செய்யப்படும்வரையிலும் அதற்கிணங்க தொடர்ந்து செயலாற்றலில் இருந்துவரும்.

குறித்தசில சட்டங்களின் கீழ் விதிகள், ஆணைகள் முதலியவற்றின் நீட்டிப்பு.

5. ஆட்சிப்பரப்புகளுக்காக அளாவி நிற்கும் சட்டம் எதுவும் மற்றும் அத்தகைய சட்டத்திற்கான வகையங்களின் கீழ் மைய அரசால பொதுவாகச் செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதிகள், அறிவிக்கைகள், ஆணைகள், ஒழுங்குமுறைவிதிகள் மற்றும் துணைவிதிகள் அனைத்தும், புதுச்சேரியில் அச்சட்டத்திற்கான வகையங்களின் தொடக்கம் முதற்கொண்டு புதுச்சேரிக்கு நீட்டிக்கப்பட்டு அது செயலாற்றலுக்கு வருதலும் வேண்டும்.

சொற்பொருள்-கோள் விதிகள்.

6. (1) ஏதேனும் சட்டத்தில் அல்லது அதன்கீழ் செய்யப்பட்டு அல்லது பிறப்பிக்கப்பட்டு இச்சட்டத்தின்படி புதுச்சேரிக்கு நீட்டிக்கப்பட்ட விதிகள், அறிவிக்கைகள், ஆணைகள், ஒழுங்குமுறைவிதிகள் மற்றும் துணைவிதிகள் எவற்றிலும்,-

(அ) புதுச்சேரியில் செயலாற்றலில் இல்லாத சட்டத்தின் ஏதேனும் வகையம் அல்லது தற்போதிருந்துவராத பணித்துறையாளர் எவரேனும் பற்றிய சுட்டுகை எதுவும், அந்த ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் நேரிணையாகச் செயலாற்றலில் உள்ள சட்டம் அல்லது தற்போதிருந்துவரும் பணித்துறையாளர் பற்றிய சுட்டுகையாகவே பொருள்கொள்ளப்படும்:

ஆனால்,

(i) அத்தகைய நேரிணையான பணித்துறையாளர் யார் என்பது குறித்து வினா எதுவும் எழுகிறது என்றால், அல்லது

(ii) அத்தகைய நேரிணையான பணித்துறையாளர் எவரும் இல்லை என்றால்,

ஆட்சியாளர், அத்தகைய பணித்துறையாளர் யார் என்பது குறித்து முடிபுசெய்ய வேண்டும் மற்றும் அவரது முடிபு அறுதியானதாகும்;

(ஆ) மாநில அரசு பற்றிய சுட்டுகை எதுவும், மைய அரசு பற்றிய சுட்டுகையாகக் கொள்ளப்படும் மற்றும் ஆட்சியாளர் பற்றிய ஒரு சுட்டுகையை உள்ளடக்குவதாகவும் பொருள்கொள்ளப்படும்.

(2) சட்டம் எதையும் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி, அறிவிக்கை, ஆணை ஒழுங்குமுறைவிதி அல்லது துணைவிதி எதனின் புதுச்சேரி தொடர்பான பொருந்துகையை எளிதாக்கும் நோக்கத்திற்காக, நீதிமன்றம் அல்லது வேறு அதிகாரஅமைப்பு எதுவும், அந்த நீதிமன்றம் அல்லது வேறு அதிகாரஅமைப்பு தம்முன்னுள்ள பொருட்பாட்டுக்கு அதை தழுவியேற்பதற்குத் தேவையானதாகலாகும் அல்லது முறையானதாகலாகும், அதன் சாரம் பாதிக்கப்படாத, அத்தகைய முறையில் அதைப் பொருள்கோள் செய்யலாம்.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

7. புதுச்சேரிக்கு இச்சட்டத்தினால் நீட்டிக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின் வகையங்களுக்குச் செயல்விளைவளிப்பதில் இடர்ப்பாடு எதுவும் எழுகிறது என்றால், மைய அரசு, சந்தர்ப்பம் வேண்டுறுத்தலாகிறவாறு, அந்த இடர்ப்பாட்டை அகற்றித் தேவையானது என அதற்கு தோன்றுகிற அத்தகைய சட்டத்தின் வகையங்களுக்கு முரண்பட்டிராத அத்தகைய வகையங்களை அல்லது அத்தகைய கட்டளைகளை ஆணை வாயிலாகச் செய்யலாம் அல்லது பிறப்பிக்கலாம்; மற்றும் அத்தகைய ஆணை எதுவும் புதுச்சேரியில் அச்சட்டத்தின் தொடக்கத்திற்கு முந்திய நாளிலிருந்து நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது வேறு அதிகாரஅமைப்பு முன்பு முடிவுறாநிலையிலுள்ள பொருட்பாடு எதையும் நேரிணையான நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது அதிகாரஅமைப்புக்கு தீர்வுமுறைசெய்யும் பொருட்டு மாற்றல்செய்வதற்கு வகைசெய்யலாம்:

வரம்புரையாக, ஏதேனும் சட்டம் புதுச்சேரியில் செயலாற்றலுக்கு வருகிற தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவுற்றதன் பின்பு அத்தகைய சட்டம் பொறுத்தமட்டில் அத்தகைய ஆணை எதுவும் இப்பிரிவின் கீழ் செய்யப்படக்கூடாது; மற்றும் ஒரு சட்டத்தின் வகையங்கள் வெவ்வேறு தேதிகளில் புதுச்சேரிக்கு செயலாற்றலுக்கு கொண்டுவரப்படுகிறவிடத்து, அந்த இரண்டு ஆண்டுகள் காலஅளவானது 3ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவுக்கான வரம்புரையில் குறித்துரைக்கப்பட்டவாறு தொடர்புடைய வகையத்தின் தொடக்கம் குறித்தே கணக்கிடப்படவேண்டும்.

## இணைப்புப்பட்டியல்

[காண்க: பிரிவு 3(1)]

## பகுதி - I

| ஆண்டு | எண் | குறுந்தலைப்பு | மாற்றமைவுகள் |
|---|---|---|---|
| 1839 | 32 | வட்டிச் சட்டம், 1839. | |
| 1850 | 12 | பொதுக் கணக்காளர்களின் தவறுகைச் சட்டம், 1850. | |
| 1850 | 18 | நீதிமுறை அலுவலர்கள் காப்பளிப்புச் சட்டம், 1850. | |
| 1850 | 21 | சாதித் தகுதியின்மைகளை அகற்றும் சட்டம், 1850. | |
| 1851 | 8 | இந்தியச் சுங்க வரிகள் சட்டம், 1851. | |
| 1855 | 12 | சட்டமுறை பிரதிநிதிகள் உரிமைவழக்குகள் சட்டம், 1855. | |
| 1855 | 13 | இந்திய மரண விபத்துகள் சட்டம், 1855. | |
| 1856 | 9 | இந்தியக் கப்பல் சரக்குப்பட்டிச் சட்டம்,1856. | |
| 1856 | 12 | உரிமையியல் நீதிமன்றக் கட்டளைநிறைவேற்றுநர்கள் சட்டம், 1856. | |
| 1859 | 9 | பறிமுதல் சட்டம், 1859. | |
| 1863 | 23 | தரிசு நிலங்கள் (உரிமைக்கோரிக்கைகள்) சட்டம்,1863. | |
| 1864 | 15 | இந்தியச் சுங்கவரிகள் சட்டம், 1864. | |
| 1865 | 3 | ஊர்தியர்கள் சட்டம், 1865. | |
| 1866 | 21 | மதம் மாறியோர் திருமண உறவுமுறிப்புச் சட்டம்,1866. | முதன்மைச் சட்டத்தில் 1ஆம் பிரிவுக்குப் பின்பு பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும்:- "2. இந்தச் சட்டத்தில் அடங்கிய எதுவும் புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் இனமுறைச்சட்டம் துறந்தோர்க்குப் (Renoncants) பொருந்தாது". |
| 1872 | 9 | இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872 | முதன்மைச் சட்டத்தின் 1 ஆம் பிரிவின் இறுதியில், பின்வரும் சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்:- "வரம்புரையாக இச்சட்டத்தில் அடங்கிய எதுவும் புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் இனமுறைச்சட்டம் துறந்தோர்க்குப் (Renoncants) பொருந்தாது". |
| 1872 | 15 | இந்தியக் கிறித்துவர்கள் திருமணச் சட்டம், 1872 | |
| 1873 | 10 | இந்திய ஆணையுரைகள் சட்டம், 1873 | முதன்மைச் சட்டத்தின் 1 ஆம் பிரிவின் இறுதியில், பின்வரும் சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்:- "வரம்புரையாக இச்சட்டத்தில் அடங்கிய எதுவும் புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் இனமுறைச்சட்டம் துறந்தோர்க்குப் (Renoncants) பொருந்தாது"- |
| 1875 | 9 | இந்திய உரிமை வயதுவந்தோர் சட்டம், 1875 | |

| ஆண்டு | எண் | குறுந்தலைப்பு | மாற்றமைவுகள் |
|---|---|---|---|
| 1880 | 1 | சமயச் சங்கங்கள் சட்டம், 1880 | |
| 1880 | 12 | காஜியார் சட்டம், 1880 | |
| 1880 | 13 | அம்மைக்குத்துதல் சட்டம், 1880 | |
| 1882 | 4 | சொத்துரிமை மாற்றளிப்புச் சட்டம், 1882 | |
| 1882 | 5 | இந்தியத் துய்ப்புரிமைகள் சட்டம், 1882 | |
| 1882 | 7 | பகரவுரிமை அதிகார ஆவணங்கள் சட்டம், 1882 | |
| 1887 | 7 | உரிமைவழக்குகள் பெறுமானமதிப்புச் சட்டம், 1887 | |
| 1887 | 9 | மாகாணச் சிறுவழக்கு நீதிமன்றங்கள் சட்டம், 1887 | |
| 1890 | 1 | வருவாய் வசூலிப்புச் சட்டம், 1890 | |
| 1890 | 8 | காப்பாளர்கள் மற்றும் காப்பிலுள்ளவர்கள் சட்டம், 1890 | முதன்மைச் சட்டத்தில் 1 ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவுக்கு பின்பு பின்வரும் சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்:- "வரம்புரையாக இச்சட்டத்தில் அடங்கிய எதுவும் புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் இனமுறைச்சட்டம் துறந்தோர்க்குப் (Renoncants) பொருந்தாது". |
| 1891 | 18 | வங்கியர் கணக்கேடுகள் சான்றுச் சட்டம், 1891 | |
| 1893 | 4 | பாகப்பிரிவினைச் சட்டம், 1893 | |
| 1894 | 9 | சிறைச்சாலைகள் சட்டம், 1894 | |
| 1897 | 3 | கொள்ளைநோய்கள் சட்டம், 1897 | |
| 1899 | 4 | அரசுக் கட்டிடங்கள் சட்டம், 1899 | |
| 1900 | 3 | கைதிகள் சட்டம், 1900 | |
| 1908 | 16 | இந்தியப் பதிவுச் சட்டம், 1908 | |
| 1914 | 9 | உள்ளூர் அதிகாரஅமைப்புகள் கடன்கள் சட்டம், 1914 | |
| 1916 | 15 | இந்துச் சொத்துத் தீர்வேற்பாட்டுச் சட்டம், 1916 | முதன்மை சட்டத்தில் 1 ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவுக்கு பின்பு பின்வரும் சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும் :- வரம்புரையாக இச்சட்டத்தில் அடங்கிய எதுவும் புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் இனமுறைச்சட்டம் துறந்தோர்க்குப் (Renoncants) பொருந்தாது". |
| 1917 | 5 | ஆவணயேடுகள் அழிப்புச் சட்டம்,1917 | |
| 1918 | 10 | வரம்பிகந்த வட்டிக் கடன்கள் சட்டம், 1918 | |
| 1919 | 12 | நஞ்சுகள் சட்டம், 1919 | |
| 1920 | 5 | மாகாண நொடிப்புநிலைச் சட்டம், 1920 | |

| ஆண்டு | எண் | குறுந்தலைப்பு | மாற்றமைவுகள் |
|---|---|---|---|
| 1920 | 10 | இந்தியக் கடனீட்டுஆவணங்கள் சட்டம், 1920 | |
| 1920 | 15 | இந்தியச் செஞ்சிலுவைச் சங்கச் சட்டம், 1920 | |
| 1920 | 33 | கைதிகளை அடையாளங்காணல் சட்டம்,1920 | |
| 1921 | 18 | பராமரிப்பு ஆணைகள் செயலுறுத்துச் சட்டம், 1921 | |
| 1922 | 7 | அயல்குடியேற்றச் சட்டம், 1922 | |
| 1922 | 22 | காவல் (பற்றுறுதியின்மையைத் தூண்டுதல்) சட்டம்,1922 | |
| 1923 | 5 | இந்தியக் கொதிகலன்கள் சட்டம், 1923 | |
| 1928 | 12 | இந்து மரபுரிமையடைவு (தகுதியின்மைகளை அகற்றுதல்) சட்டம்,1928 | முதன்மைச் சட்டத்தில் 1ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவின் இறுதியில் பின்வரும் சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்:- "அல்லது புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் இனமுறைச்சட்டம் துறந்தோர்க்கு." |
| 1929 | 19 | குழந்தைத் திருமணத் தடையுறுத்துச் சட்டம், 1929 | முதன்மைச் சட்டத்தில் 1ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவுக்குப் பின்பு பின்வரும் சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்:- "வரம்புரையாக இச்சட்டத்தில் அடங்கிய எதுவும் புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் இனமுறைச்சட்டம் துறந்தோர்க்குப் (Renoncants) பொருந்தாது". |
| 1930 | 3 | சரக்குகள் விற்பனைச் சட்டம், 1930 | |
| 1930 | 30 | இந்துக் கல்விவழி ஆக்கங்கள் சட்டம், 1930 | |
| 1936 | 3 | பார்சித் திருமணம் மற்றும் மணமுறிவுச் சட்டம், 1936 | முதன்மைச் சட்டத்தில் 1ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் வரம்புரைக்குப் பின்பு பின்வரும் சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்:- "ஆனால், இச்சட்டத்தில் அடங்கிய எதுவும் புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப் பரப்பின் இனமுறைச்சட்டம் துறந் தோர்க்குப் (Renoncants) பொருந்தாது". |
| 1937 | 26 | இசுலாமியர் இனமுறைச் சட்டம் (சாரியத்) பொருந்துகைச் சட்டம்,1937 | முதன்மைச் சட்டத்தில் 1ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவுக்குப் பின்பு பின்வரும் சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்:- "வரம்புரையாக இச்சட்டத்தில் அடங்கிய எதுவும் புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் இனமுறைச்சட்டம் துறந்தோர்க்குப் (Renoncants) பொருந்தாது.". |

| ஆண்டு | எண் | குறுந்தலைப்பு | மாற்றமைவுகள் |
|---|---|---|---|
| 1939 | 8 | இசுலாமியர் திருமணங்கள் உறவுமுறிப்புச் சட்டம்,1939 | முதன்மைச் சட்டத்தில் 1ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவுக்கும் பின்பு பின்வரும் சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும் :- "வரம்புரையாக இச்சட்டத்தில் அடங்கிய எதுவும் புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் இனமுறைச் சட்டம் துறந்தோர்க்குப் (Renoncants) பொருந்தாது". |
| 1939 | 30 | வர்த்தக ஆவணங்கள் சான்றுச் சட்டம், 1939 | |
| 1940 | 10 | பொதுவர்தீர்ப்புச் சட்டம், 1940 | |
| 1943 | 9 | பரிமாற்றப்பாடு சட்டம், 1943 | |
| 1944 | 38 | குற்றவியல் சட்டத் திருத்த அவசரச்சட்டம், 1944 | |
| 1945 | 47 | பன்னாட்டுப் பணநிதியம் மற்றும் வங்கிச் சட்டம், 1945 | |
| 1947 | 43 | ஐக்கிய நாடுகள் (பாதுகாப்பு மன்றம்) சட்டம்,1947 | |
| 1947 | 46 | ஐக்கிய நாடுகள் (சிறப்புரிமைகள் மற்றும் தனி விலக்குரிமைகள்) சட்டம், 1947 | |
| 1948 | 41 | தூதரக மற்றும் துணைத்தூதரக அலுவலர்கள் (ஆணையுரை மற்றும் கட்டணங்கள்) சட்டம், 1948 | |
| 1950 | 29 | கைதிகள் மாற்றல் சட்டம், 1950 | |
| 1950 | 64 | சாலைப் போக்குவரத்துக் கழகங்கள் சட்டம், 1950 | |
| 1950 | 74 | தந்திக்கம்பிகள் (சட்டமுரணான உடைமை) சட்டம்,1950 | |
| 1951 | 50 | காப்புவரி ஆணையச் சட்டம், 1951 | |
| 1951 | 54 | நிறுமங்கள் (தேசிய நிதியங்களுக்கு நன்கொடைகள்) சட்டம், 1951 | |
| 1951 | 61 | அனைத்து இந்திய அரசுப் பணிகள் சட்டம், 1951 | |
| 1952 | 35 | சுரங்கங்கள் சட்டம், 1952 | |
| 1952 | 53 | சான்றுறுதியர்கள் சட்டம், 1952 | |
| 1954 | 29 | வக்புச் சட்டம், 1954 | |
| 1955 | 32 | கைதிகள் (நீதிமன்றத்தில் முன்னிலையாதல்) சட்டம்,1955 | |
| 1955 | 42 | பரிசுப் போட்டிகள் சட்டம், 1955 | |
| 1955 | 45 | உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் (பணி நிபந்தனைகள்) மற்றும் பலவகை வகையங்கள் சட்டம், 1955 | |
| 1956 | 3 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணையச் சட்டம், 1956 | |
| 1956 | 31 | ஆயுள் காப்பீட்டுக் கழகச் சட்டம், 1956 | |

| ஆண்டு | எண் | குறுந்தலைப்பு | மாற்றமைவுகள் |
|---|---|---|---|
| 1956 | 32 | இந்து உரிய வயதுவராதோர் மற்றும் காப்பாண்மை சட்டம்,1956 | முதன்மைச் சட்டத்தில் 3ஆம் பிரிவில் (2)ஆம் உட்பிரிவுக்குப் பின்பு பின்வரும் சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்:- "(2A) உட்பிரிவு (1)இல் அடங்கிய எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தில் அடங்கிய எதுவும் புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் இனமுறைச் சட்டம் துறந்தோர்க்குப் (Renoncants) பொருந்தாது". |
| 1956 | 42 | கடனீட்டு ஆவண ஒப்பந்தங்கள் (ஒழுங்குமுறை) சட்டம், 1956 | |
| 1956 | 78 | இந்து தத்தெடுப்புகள் மற்றும் பராமரிப்புச் சட்டம்,1956 | முதன்மைச் சட்டத்தில் 2ஆம் பிரிவில் (2)ஆம் உட்பிரிவுக்குப் பின்பு பின்வரும் சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்:- "(2A) உட்பிரிவு (1)இல் அடங்கிய எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தில் அடங்கிய எதுவும் புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் இனமுறைச்சட்டம் துறந்தோர்க்குப் (Renoncants) பொருந்தாது.". |
| 1956 | 93 | இளைஞர்கள் (தீங்குவிளைக்கும் வெளியீடுகள்) சட்டம், 1956 | |
| 1956 | 96 | குடிசைப்பகுதிப் பரப்பிடங்கள் (மேம்பாடு மற்றும் மாற்றுதல்) சட்டம், 1956 | |
| 1956 | 104 | மகளிர் மற்றும் சிறுமியர் பரத்தமைத்தொழில் வாணிகத்தை ஒடுக்குதல் சட்டம், 1956 | |
| 1958 | 20 | குற்றச்செயலர்கள் நன்னடத்தைக் கண்காணிப்புச் சட்டம், 1958 | |
| 1958 | 21 | அரிசி ஆலைத்தொழில் (ஒழுங்குமுறை) சட்டம், 1958 | |
| 1958 | 29 | உழைக்கும் பத்திரிகையாளர்கள் (ஊதிய வீதங்கள் நிருணயம்) சட்டம், 1958 | |
| 1958 | 42 | பன்னாட்டு நிதிக் கழகம் (தகுநிலை, தனி விலக்குரிமைகள் மற்றும் சிறப்புரிமைகள்) சட்டம், 1958 | |
| 1960 | 6 | ஜெனிவா இணக்கஒப்பந்தங்கள் சட்டம், 1960 | |
| 1960 | 32 | பன்னாட்டு வளர்ச்சி சங்கங்கள் (தகுநிலை, தனி விலக்குரிமைகள் மற்றும் சிறப்புரிமைகள்) சட்டம், 1960 | |

| ஆண்டு | எண் | குறுந்தலைப்பு | மாற்றமைவுகள் |
|---|---|---|---|
| 1960 | 63 | முன்னுரிமைப் பங்குகள் (ஆதாயஈவுகள் ஒழுங்கு முறை) சட்டம், 1960 | முதன்மைச் சட்டத்தில் 1ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரவின் வரம்புரைக்குப் பின்பு பின்வரும் சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்:- "(3) உட்பிரிவு (2)இல் அடங்கிய எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் வகையங்கள் புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்புக்கு பொருந்துகையில், அவை குறித்துரைத்த மாற்றமைவுகளுக்கு உட்பட்டுச் செயல்விளைவு கொள்ளும்".<br>7ஆம் பிரிவுக்குப் பின்பு பின் வருவனவற்றைச் சேர்க்கவும்:-<br>"இணைப்புப்பட்டியல்<br>[காண்க: பிரிவு 1(3)]<br>*புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்புக்கு இச்சட்டம் பொருந்துகையில் அதன் மாற்றமைவுகள்.-*<br>1. பிரிவுகள் 3 மற்றும் 4 விட்டுவிடப்படவேண்டும்.<br>2. பிரிவு 4A இல், (i) வரையறுத்து ஒப்பிய ஆதாயஈவு, மற்றும் (ii) "3ஆம் பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் குறித்துரைத்தவாறு வரையறுத்துஒப்பிய ஆதாயஈவின் பதினோரு விழுக்காட்டுக்குச் சமமான ஒரு தொகையின் ஒட்டுமொத்தத் தொகையில் இருபத்தேழுரை விழுக்காடு" என்னும் சொற்கள், அடைப்புக்குறிகள், எழுத்துக்கள் மற்றும் இலக்கங்களுக்கு மாற்றாக, பின்வருவன அமைக்கப்பட வேண்டும், அவையாவன:-<br>"வரையறுத்துஒப்பிய ஆதாயஈவின் இருபத்தேழுரை விழுக்காடு:<br>வரம்புரையாக ஒரு நிறுமத்தின் மொத்த வருவாயின் பெரிய பகுதி பொறுத்து 1961ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தின் (43/1961) 294A பிரிவின் கீழ் மைய அரசால் பிறப்பிக்கப்பட்ட ஓர் அறிவிக்கையின் கீழ் மேற்சொன்ன சட்டத்தின்படி அந்த நிறுமத்தின் மீது விதிக்கத்தக்க வரியைப் பிடித்தம் செய்வதற்கு உரிமைப்பாடுடைய நிறுமத்தின் எந்த முன்னுரிமைப் பங்குகள் குறித்து ஆதாயஈவு விளம்பப் பட்டிருக்கிறதோ அல்லது செலுத்தப் பட்டிருக்கிறதோ அந்த முன்னுரிமைப் பங்குகள் அந்த நிறுமத்தின் முன்னுரிமைப் பங்கு மூலதனத்தின் பகுதியாக அமைகிறவிடத்து, வரையறுத்து ஒப்பிய |

| ஆண்டு | எண் | குறுந்தலைப்பு | மாற்றமைவுகள் |
| --- | --- | --- | --- |
| | | | ஆதாயஈவின் இருபத்தேழுரை விழுக்காடு பற்றிய கட்டுகை பற்றியதாகவே பொருள்கொள்ளப்படும்-<br>(i) 1965 ஏப்ரல் 1ஆம் நாளன்று தொடங்குகிற வரிக்கணிப்பு ஆண்டு தொடர்புடைய முந்திய ஆண்டு குறித்து அத்தகைய முன்னுரிமைப் பங்கு பொறுத்து விளம்பப்பட்டிருக்கிற அல்லது செலுத்தப்பட்டடிருக்கிற வரையறுத்துஒப்பிய ஆதாயஈவு என்கிறவிடத்து, மேற்சொன்ன இருபத்தேழுரை விழுக்காடு என்பது அதிலிருந்து நாற்பத்தைந்து விழுக்காடு குறைக்கப்பட்டதாகப் பொருள் கொள்ளப்படும்;<br>(ii) அத்தகைய ஆதாயஈவு, 1966 ஏப்ரல் 1ஆம் நாளன்று தொடங்குகிற வரிக்கணிப்பு ஆண்டு தொடர்புடைய முந்திய ஆண்டு குறித்து விளம்பப்பட்டடிருக்கிறது அல்லது செலுத்தப் பட்டிருக்கிறது என்கிறவிடத்து, மேற்சொன்ன இருபத்தேழுரை விழுக்காடு என்பது அதிலிருந்து இருபத்தைந்து விழுக்காடு குறைக்கப்பட்டதாகப் பொருள் கொள்ளப்பட வேண்டும்;<br>(iii) அத்தகைய ஆதாயஈவு, 1967 ஏப்ரல் 1ஆம் நாள் அல்லது 1968 ஏப்ரல் 1ஆம் நாள் அல்லது 1969 ஏப்ரல் 1ஆம் நாள் அன்று தொடங்குகிற வரிக்கணிப்பு ஆண்டு தொடர்புடைய முந்திய ஆண்டு குறித்து விளம்பப்பட்டிருக்கிறது அல்லது செலுத்தப்பட்டிருக்கிறது என்கிறவிடத்து, மேற்சொன்ன இருபத்தேழுரை விழுக்காடு என்பது அதிலிருந்து பத்து விழுக்காடு குறைக்கப்பட்டதாகப் பொருள்கொள்ளப்பட வேண்டும்.<br>விளக்கம் :- ஐயப்பாடுகளை அகற்றுவதற்காக, ஒரு நிறுமத்தால் செலுத்தப் படவேண்டிய வருமான வரியின் பொருட்டு ஓர் ஆதாய ஈவிலிருந்து செய்யப்பட்ட கழிமானம் குறித்து இப்பிரிவிலுள்ள கட்டுகை எதுவும், 1961ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தின் (43/1961) 194 ஆம் பிரிவின் கீழ் அந்த ஆதாயஈவிலிருந்து நிறுமத்தால் கழிக்கப்பட்ட தொகை எதையும் உள்ளடக்காது.". |

| ஆண்டு | எண் | குறுந்தலைப்பு | மாற்றமைவுகள் |
|---|---|---|---|
| | | | 3. பிரிவு 5இல், (2)ஆம் உட்பிரிவு விட்டுவிடப்பட வேண்டும்.<br>4. பிரிவு 6 விட்டு விடப்படவேண்டும்." |
| 1961 | 25 | வழக்குரைஞர்கள் சட்டம், 1961 | 3ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில்,-<br>(1) பிரிவுக்கூறு (a) இல் "மெட்ராஸ்" என்பதை விட்டுவிடவும்;<br>(2) (எண். 8/1963 ஒழுங்குமுறைவிதியால் புகுத்தப்பட்ட) (cc) பிரிவுக்கூறினை (ccc) பிரிவுக்கூறாக மறு எழுத்திடவும் (re-letter) மற்றும் அவ்வாறு மறு எழுத்திடப்பட்ட பிரிவுக்கூறுக்கு முன்பு பின்வருவதைப் புகுத்தவும்:-<br>"(cc) மெட்ராஸ் மாநிலத்திற்கும் புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்புக்கும் மெட்ராஸ் வழக்குரைஞர் மன்றம் என அறியப்பட வேண்டியது.".<br>58A பிரிவுக்குப் பின்பு பின்வருவனவற்றைப் புகுத்தவும்:-<br>"58AA புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப் பரப்புத் தொடர்பான சிறப்பு வகையங்கள்.-<br>(1) இச்சட்டத்தில் அடங்கிய எது எவ்வாறிருப்பினும், புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் IIIஆம் அத்தியாயத்தின் வகையங்கள் செயலாற்றலுக்குக் கொணரப்படுகிற தேதிக்கு முந்திய நாளில் இருந்து, மேற்சொன்ன ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் செயலாற்றலில் இருந்த சட்டம் எதன் கீழும் (வாதுரை அல்லது செயலமர்தல் அல்லது இரண்டு வழியிலேனும்) சட்டத் தொழிலாற்ற உரிமைப்பாடு கொண்டிருந்த அல்லது மேற்சொன்ன தேதியன்று அரசுப் பணியில் இருந்திராதிருந்தால் அவ்வாறு சட்டத் தொழிலாற்ற உரிமைப்பாடு கொண்டிருக்கக்கூடிய ஆட்கள் அனைவரும் 17ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (a) பிரிவுக்கூறின் நோக்கங்களுக்காக, 1926ஆம் ஆண்டு இந்திய வழக்குரைஞர் மன்றச் சட்டத்தின் கீழ் ஓர் உயர் நீதிமன்றத்தின் பெயர்ப் பட்டியலில் வழக்குரைஞர்களாகப் பதிவு செய்யப்பட்டிருந்தனர் எனக் கொள்ளப்பட வேண்டும்; மற்றும் அத்தகைய ஆள் ஒவ்வொருவரும், மெட்ராஸ் வழக்குரைஞர் மன்றத்தால் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய காலத்திற்குள் இதற்கெனச் |

| ஆண்டு | எண் | குறுந்தலைப்பு | மாற்றமைவுகள் |
|---|---|---|---|
| | | | செய்யப்பட்ட ஓர் விண்ணப்பத்தின் பேரில், மேற்சொன்ன ஒன்றியத்து ஆட்சிப்பரப்பைப் பொறுத்துப் பேணிவரப்படும் மாநிலப் பெயர்ப்பட்டியலில் ஓர் வழக்குரைஞராக ஏற்கப்படவேண்டும்.<br>(2) இச்சட்டத்தில் அடங்கிய எது எவ்வாறிருப்பினும், புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் IV ஆம் அத்தியாயத்தின் வகையங்கள் செயலாற்றலுக்குக் கொணரப்படுகிற தேதிக்கு முந்திய நாளில் இருந்து, மேற்சொன்ன ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் செயலாற்றலில் இருந்த ஏதேனும் சட்டத்தின் வகையங்களின் பயன்திறனால் (வாதுரை அல்லது செயலமர்தல் அல்லது இரண்டு வழியிலேனும்) சட்டத் தொழிலாற்றி வருகிற மற்றும் (1)ஆம் உட்பிரிவின் கீழ் வழக்குரைஞராகப் பெயர் பதிவு செய்யப்படத் தேர்ந்துகொள்ளாத அல்லது தகுதிநிலை பெற்றிராத ஆள் ஒவ்வொருவரும், அத்தகைய சட்டத்தின் தொடர்புற்ற வகையங்கள் 1968ஆம் ஆண்டு புதுச்சேரிச் (சட்டங்கள் நீட்டிப்பு) சட்டத்தினால் நீக்கறவு செய்யப் பட்டிருந்த போதிலும், ஏதேனும் நீதிமன்றம் அல்லது வருவாய் அலுவலகத்தில் அல்லது அதிகார அமைப்பு அல்லது ஆள் முன்பாகச் சட்டத் தொழிலாற்றுவது பொறுத்து அதே உரிமைகளை தொடர்ந்து அனுபவித்து வருவார்; மற்றும் மேற்சொன்ன தேதிக்கு முன் தேதியில் இருந்து, தாம் அனுபவித்த அல்லது நேர்வுக்கேற்பத் தாம் உட்பட்டிருந்த அதே அதிகாரஅமைப்பின் ஒழுங்குக் கட்டுப்பாட்டு அதிகாரவரம்புக்கு தொடர்ந்து உடன்பட்டிருப்பார்; மற்றும் அதற்கிணங்க மேற்சொன்ன சட்டத்தின் தொடர்புற்ற வகையங்கள் நீக்கறவு செய்யப்பட்டிராததைப் போன்றே அவை அத்தகைய ஆட்கள் தொடர்பாகச் செயல்விளைவு கொண்டிருக்கும்". |
| 1961 | 28 | வரதட்சணைத் தடைச் சட்டம்,1961 | |
| 1961 | 45 | அயல்நாட்டு விருதுகள் (அங்கீகாரம் மற்றும் செயலுறுத்தம்) சட்டம், 1961 | |

பகுதி – II

| ஆண்டு | எண் | குறுந்தலைப்பு | ஒரு மாநிலம் அல்லது ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் செயலாற்றலில் உள்ளவாறு | மாற்றமைவுகள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1870 | 7 | நீதிமன்றக் கட்டணங்கள் சட்டம், 1870 | 1966 ஆகஸ்டு 1ஆம் நாள் அன்று அந்தமான் மற்றும் நிக்கோபார்த் தீவுகள் ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் செயலாற்றலில் உள்ளவாறு. | 2 ஆம் பிரிவில் (ஆ) பிரிவுக்கூறுக்குப் பதிலாக, பின்வரும் பிரிவுக்கூறு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும் :- '(ஆ) புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு தொடர்பாக "மாநில அரசு" என்பது அதன் ஆட்சியாளர் எனப் பொருள்படும்'. |
| 1899 | 2 | இந்திய முத்திரைச் சட்டம், 1899 | 1966 ஆகஸ்டு 1ஆம் நாள் அன்று மெட்ராஸ் மாகாணத்தில் செயலாற்றலில் உள்ளவாறு | 2ஆம் பிரிவில் (25)ஆம் பிரிவுக் கூறுக்குப் பின்பு பின்வரும் சொற்றொடர் புகுத்தப்படுதல் வேண்டும்:- '(26) புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு தொடர்பாக "மாநில அரசு" என்பது அதன் ஆட்சியாளர் எனப் பொருள்படும்'.<br>3ஆம் பிரிவில், முதலாம் மற்றும் இரண்டாம் வரம்புரைகளை விட்டுவிடவும்.<br>19 A பிரிவில்,-<br>(அ) "மெட்ராஸ் மாகாணம்" என்பதற்கு மாற்றாகப் "புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு" என்பதை அமைக்கவும்;<br>(ஆ) "மாகாணம்" என்பதற்கு மாற்றாக, "ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு" என்பதை அமைக்கவும்.<br>57ஆம் பிரிவில் (1)ஆம் உட்பிரிவில், (ஈ) பிரிவுக்கூறின் இறுதியில் "மற்றும்" என்பதை |

| ஆண்டு | எண் | குறுந்தலைப்பு | ஒரு மாநிலம் அல்லது ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் செயலாற்றலில் உள்ளவாறு | மாற்றமைவுகள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | விட்டுவிடவும் மற்றும் (உ) பிரிவுக் கூறுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்:- "(உஉ) புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் எழுகிறது என்றால், அது மெட்ராஸ் உயர் நீதிமன்றத்திற்கு.". 75A பிரிவில், (2)ஆம் உட்பிரிவுக்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவு மாற்றாக அமைக்கப் படுதல் வேண்டும்:- "(2) இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதி ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், ஒரு தொடர் அமர்விலோ அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடுத்தடுத்த தொடர் அமர்வு களிலோ அடங்கலாகும் பதினான்கு நாட்கள் கொண்ட மொத்த காலஅளவுக்குச் சட்டப்பேரவை அமர்வில் இருக்கையில் அதன் முன்பு வைக்கப்படுதல் வேண்டும். அது அவ்வாறு வைக்கப்பட்ட தொடர் அமர்வு அல்லது உடனடியாக அடுத்து வரும் அமர்வுகள் முடிவுறுவதன்முன்பு, சட்டப் பேரவையானது அந்த விதி எதிலும் மாற்றமைவு ஏதேனும் செய்கிறது, அல்லது அத்தகைய விதி எதுவும் செய்யப்படக் |

| ஆண்டு | எண் | குறுந்தலைப்பு | ஒரு மாநிலம் அல்லது ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் செயலாற்றலில் உள்ளவாறு | மாற்றமைவுகள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | கூடாது என முடிவு செய்கிறதென்றால், அதன்பின்பு, அவ்விதி அத்தகைய மாற்றமைவு செய்யப்பட்ட வடிவில் மட்டுமே செயல்விளைவு கொண்டிருக்கும் அல்லது நேர்வுக்கேற்ப செயல்விளைவு எதனையும் கொண்டிருக்காது. எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது நீக்கிவிடுதல் எதுவும் அந்த விதி அல்லது அறிவிக்கையின் கீழ் முந்தியே செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கு ஊறுபாடின்றி இருக்கவேண்டும்". <br><br> இணைப்புப்பட்டியல் Iஇல்- <br> (i) 9ஆம் பதிவில், விலக்களிப்பினை விட்டுவிடவும். <br> (ii) பிரிவு 15இல், "மெட்ராஸ் நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமைவழக்குகள் பெறுமானமதிப்புச் சட்டம், 1955 (மெட்ராஸ் சட்டம் XIV/1955) என்பதற்கு மாற்றாக, "நீதிமன்றக் கட்டணங்கள் சட்டம், 1870 (7/1870)" என்பதை அமைக்கவும்; <br> (iii) பதிவு 20Aயை விட்டுவிடவும்; <br> (iv) பதிவு 62இல் (ச) பிரிவுக்கூறில், "காப்பாட்சியர்-தலைவர் சட்டம், 1913 (மையச் சட்டம் (III/1963) பிரிவு 25"-என்பதற்கு மாற்றாக, "காப்பாட்சியர்-தலைவர் சட்டம், 1963 (45/1963) பிரிவு 22"-என்பதை அமைக்கவும். |

| ஆண்டு | எண் | குறுந்தலைப்பு | ஒரு மாநிலம் அல்லது ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் செயலாற்றலில் உள்ளவாறு | மாற்றமைவுகள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1908 | 5 | உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச்சட்டம், 1908 | 1966 ஆகஸ்டு 1ஆம் நாள் அன்று மெட்ராஸ் மாநிலத்தில் செயலாற்றலில் உள்ளவாறு. | 45ஆம் பிரிவுக்குப் பின்பு பின்வரும் பிரிவு புகுத்தப்படுதல் வேண்டும்:-<br>"45A புதுச்சேரியில் இத் தொகுப்புச்சட்டத்தின் தொடக்கத் திற்கு முன்பு பிறப்பிக்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட தீர்ப்பாணைகள் முதலானவற்றின் நிறைவேற்றம் — புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பிலுள்ள உரிமையியல் நீதிமன்றம் எதனாலும் இத் தொகுப்புச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பு பிறப்பிக்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது ஆணை எதையும் நிறைவேற்றும் நோக்கத்திற்காக, அது இத்தொகுப்புச்சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது அல்லது செய்யப்பட்டிருக்கிறது எனக் கொள்ளப்படும்:<br>வரம்புரையாக, இப்பிரிவில் அடங்கிய எதுவும், அத்தகைய தீர்ப்பு, தீர்ப்பாணை அல்லது ஆணையைப் பொறுத்து உட்பட்டிருக்கலாகும் நடவடிக்கைச் செயல் எதனின் வரம்பீட்டுக் காலஅளவை நீட்டிப்பதாகப் பொருள் கொள்ளக்கூடாது.". |

வி. என். பாட்டியா
இந்திய அரசுச் செயலாளர்

1968 ஆம் ஆண்டு புதுச்சேரி (சட்டங்கள் நீட்டிப்பு) சட்டம் (சட்ட எண் 26/1968) மேலேயுள்ள தமிழ் மொழிபெயாப்பானது, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (சட்ட எண் 50/1973) இன் பிரிவு 2இன் கூறு(அ) இன் கீழ் அதிகாரமுறை குடியரசுத் தலைவரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசுச் செயலாளர்.

The above The Puducherry (Extension of Laws) Act, 1968 (Act No. 26 of 1968) has been authorised by the President, under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (Act No. 50 of 1973).

Secretary to the Government of India.

**பாண்டிச்சேரி (பெயர் மாற்றுகை) சட்டம், 2006**

**[The Pondicherry (Alteration of Name) Act, 2006]**

(சட்ட எண் 44 / 2006)

[2006, செப்டம்பர் 13]

பாண்டிச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் பெயர் மாற்றுகைக்கான ஒரு சட்டம்.

இது இந்தியக் குடியரசின் ஐம்பத்தேழாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

1. **குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.–** (1) இச்சட்டம் 2006ஆம் ஆண்டு பாண்டிச்சேரி (பெயர் மாற்றுகை) சட்டம் என அழைக்கப்பெறும்.

(2) இது மைய அரசு அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று செயலாற்றலுக்கு வரும்.

2. **பொருள்வரையறைகள்.-** இச்சட்டத்தில், தறுவாய் பிறவாறு வேண்டுறுத்தினாலன்றி,-

(அ) "குறித்திட்ட நாள்" என்பது, இச்சட்டம் செயலாற்றலுக்கு வரும் பொருட்டு 1ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் கீழ் குறித்திட்ட நாள் எனப் பொருள்படும்;

(ஆ) "உரிய அரசு" என்பது, மைய அரசு எனப்பொருள்படும்; மற்றும் அரசமைப்புக்கான ஏழாம் இணைப்புப்பட்டியலின் மாநிலப் பட்டியில் அல்லது ஒருங்கியல் பட்டியில் எண்ணிட்டுத்தொகுக்கப்பட்டுள்ள (enumerated) பொருட்பாடு தொடர்புடைய ஒரு சட்டம் பொறுத்து, அத்தகைய பொருட்பாடு புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு தொடர்பாகப் பொருந்தத்தக்க அளவில், புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு ஆட்சியாளர் என்றும் கூடப் பொருள்படும்; மற்றும்

(இ) "சட்டம்" (law) என்பது, பாண்டிச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு முழுவதிலும் அல்லது அதன் பகுதி எதிலும் சட்ட ஆற்றலைக் கொண்டிருக்கிற செய்சட்டம், அவசரச்சட்டம், ஒழுங்குமுறைவிதி, ஆணை, துணைவிதி, விதி, திட்டமுறை, அறிவிக்கை அல்லது பிற முறையாவணம் எதனையும் உள்ளடக்கும்.

3. **பாண்டிச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் பெயர் மாற்றுகை.—** குறித்திட்ட நாள் முதல், பாண்டிச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பானது புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு என வழங்கப்பெறும்.

4. **அரசமைப்பின் பகுதி-VIIIஇன் திருத்தம்.-** அரசமைப்பின் பகுதி-VIIIஇல் "பாண்டிச்சேரி" என்னும் சொல் எங்கெல்லாம் வருகிறதோ அங்கெல்லாம் "புதுச்சேரி" என்னும் சொல் மாற்றாக அமைக்கப்பட வேண்டும்.

5. **அரசமைப்புக்கான முதலாம் இணைப்புப்பட்டியலின் திருத்தம்.-** அரசமைப்புக்கான முதலாம் இணைப்புப்பட்டியலில் **"II. ஒன்றியத்து ஆட்சிப்பரப்புகள்"** எனும் தலைப்பின் கீழ், 6ஆம் பதிவில், "பெயர்" என்னும் கலப்பத்தியின் (column) கீழ், "பாண்டிச்சேரி" என்னும் சொல்லுக்கு மாற்றாக, "புதுச்சேரி" என்னும் சொல் அமைக்கப்பட வேண்டும்.

6. **அரசமைப்புக்கான நான்காம் இணைப்புப்பட்டியலின் திருத்தம்.-** அரசமைப்புக்கான நான்காம் இணைப்புப்பட்டியலில், "அட்டவணை" என்னும் தலைப்பின் கீழ், 30ஆம் பதிவில், இரண்டாம் கலப்பத்தியில் "பாண்டிச்சேரி" என்னும் சொல்லுக்கு மாற்றாக "புதுச்சேரி" என்னும் சொல் அமைக்கப்பட வேண்டும்.

7. **சட்டம் 20/1963இன் 2ஆம் பிரிவின் திருத்தம்-** 1963ஆம் ஆண்டு ஒன்றியத்து ஆட்சிப்பரப்புகள் அரசுச் சட்டத்தில், 2ஆம் பிரிவில், (i)ஆம் உட்பிரிவில், (ஏ) பிரிவுக்கூறில், "பாண்டிச்சேரி" என்னும் சொல்லுக்கு மாற்றாக "புதுச்சேரி" என்னும் சொல் அமைக்கப்பட வேண்டும்.

**8. சட்டங்களைத் தழுவியமைப்பதற்கான அதிகாரம்.-** (1) பிரிவு 3ஆல் பாண்டிச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பின் பெயர் மாற்றத்திற்குச் செயல்விளைவளிக்கும் நோக்கத்திற்காக, உரிய அரசானது, குறித்திட்ட நாளிலிருந்து ஓராண்டு முடிவுறும் முன்பு, ஆணை வாயிலாக, தேவை அல்லது உகந்ததாகும் நீக்கறவு அல்லது திருத்தம் வழியிலேனும் குறித்திட்ட நாளுக்கு முன்பு செய்யப்பட்ட சட்டம் எதிலும் அத்தகைய தழுவமைவுகளை அல்லது மாற்றமைவுகளைச் (adaptations and modifications) செய்யலாம்; மற்றும் அதன்பேரில் அத்தகைய சட்டம் ஒவ்வொன்றும் அவ்வாறு செய்யப்பட்ட தழுவமைவுகளுக்கும் மாற்றமைவுகளுக்கும் உட்பட்டுச் செயல்விளைவு கொள்ளும்.

(2) உட்பிரிவு (1)இல் உள்ள எதுவும், மேற்சொன்ன உட்பிரிவின் கீழ் உரிய அரசால் தழுவமைக்கப்பட்ட அல்லது மாற்றமைவுசெய்யப்பட்ட சட்டம் எதனையும் நாடாளுமன்றம் அல்லது புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்புச் சட்டப்பேரவை அல்லது வேறு தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பு நீக்கறவோ திருத்தமோ செய்வதிலிருந்து தடுப்பதாகக் கொள்ளப்படக் கூடாது.

**9. சட்டங்களைப் பொருள்கோள் செய்வதற்கான அதிகாரம்.-** குறித்திட்ட நாளுக்கு முன்பு செய்யப்பட்ட ஒரு சட்டத்தின் தழுவமைவுக்காக 8ஆம் பிரிவின் கீழ் வகையம் ஏதும் செய்யப்பட்டிருக்கவில்லை அல்லது போதுமானதாக இல்லாத வகையம் செய்யப்பட்டிருக்கிறது என்றிருந்தபோதிலும், அத்தகைய சட்டத்தைச் செயலுறுத்துமாறு வேண்டுறுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நீதிமன்றம், தீர்ப்பாயம், அல்லது அதிகாரஅமைப்பு எதுவும் அத்தகைய சட்டத்தின் சாரத்தைப் பாதிக்கச்செய்யாமல், அந்த நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது அதிகார அமைப்பின் முன்னுள்ள பொருட்பாடு பற்றிய வகையில் தேவையானதாகிற அல்லது முறையானதாகிற அத்தகைய முறையில், அச்சட்டத்திற்குப் பொருள்கோள் செய்யலாம்.

10. **சட்ட நடவடிக்கைகள்.-** ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு ஆட்சியாளர் ஒரு தரப்பாக (party) அல்லது மேற்சொன்ன ஆட்சியாளரால் பிரதிநிதித்துவம் செய்யப்படும் இந்திய ஒன்றியம் ஒரு தரப்பாக உள்ள சட்ட நடவடிக்கைகள் எவையேனும் குறித்திட்ட நாளுக்கு முந்நாளில் இருந்து முன்புமுடிவுறா நிலையில் இருக்கிறவிடத்து, அப்போது, அத்தகைய நடவடிக்கைகளின் நோக்கங்களுக்காகப் பாண்டிச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பு ஆட்சியாளர் பற்றிய சுட்டுகை எதுவும், புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிபரப்பு ஆட்சியாளர் பற்றிய ஒரு சுட்டுகையாகவே பொருள்கொள்ளப்படும்.

2006 ஆம் ஆண்டு பாண்டிச்சேரி (பெயர் மாற்றுகை) சட்டம் (சட்ட எண் 44/2006) மேலேயுள்ள தமிழ் மொழிபெயர்ப்பானது, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (சட்ட எண் 50/1973) இன் பிரிவு 2இன் கூறு(அ) இன் கீழ் அதிகாரமுறை குடியரசுத் தலைவரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசச் செயலாளர்.

The above The Pondicherry (Alteration of Name) Act, 2006 (Act No. 44 of 2006) has been authorised by the President, under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (Act No. 50 of 1973).

Secretary to Government of India.

online publication at **"https://styandptg.py.gov.in"**
*Published by* The Director, Government Press
*Printed at:* Government Central Press, Puducherry.
*Posted at:* Puducherry HPO on every Tuesday